www.padippakam.com

# மொழிக் கொள்கை



## இராசேந்திர சோழன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மொழிக் கொள்கை

**மும்மொழி, இருமொழி, ஒரு மொழிக் கொள்கை குறித்த புரிதல்.**

## இராசேந்திரசோழன்

SEELAN BOOKS
SIGNATURE

**உதயம் வெளியீடு**
புதுவைசாலை, மயிலம்,
திண்டிவனம் வட்டம் - 604304,
தொலை : 04147/37256.

படிப்பகம்

www.padippakam.com

**மொழிக் கொள்கை**

மும்மொழி,
இருமொழி,
ஒரு மொழிக்
கொள்கை குறித்த புரிதல்.

(C) இராசேந்திரசோழன்

முதற்பதிப்பு : ஏப்ரல் 1999

விலை : ரூ. 7-00

வெளியீடு :

உதயம் வெளியீடு,
புதுவை சாலை, மயிலம்,
திண்டிவனம் வட்டம்-604304.
தொலை : 04147/37256.

அச்சிட்டோர் :

கவிக்குயில் அச்சகம்,
47, நல்லதம்பி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொ.பே : 8536107.

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு நிமிடம்......

மொழியுரிமைக்கான குரல், வெறும் மொழியார்வம், மொழிப்பற்று இவைகளை மட்டுமே காரணமாகக் கொண்டிராமல், அது கொள்கைத் தெளிவுடனும், கோட்பாட்டு உறுதியுடனும் வலுப்பெற்று மேலோங்க வேண்டும் என்கிற நோக்கில் மும்மொழி, இருமொழி, ஒரு மொழி ஆகிய கொள்கைகளை விளக்கும் முயற்சியில் எழுதப்பட்டதே இச்சிறுநூல்.

இதை, 100 தமிழ் உணர்வாளர்கள் சென்னையில் தமிழுக்காக சாகும்வரை பட்டினிப் போராட்டம் மேற்கொண்ட ஏப்ரல் 25க்குள் கொண்டு வந்து விட வேண்டும் என்று திட்டமிட்டது.

எனில், நமக்குத் தொடர்புடைய அச்சகங்கள் கரும் பலகைத்திட்ட நூல்களை காலக் கெடுவுக்குள் முடித்துத் தரும் பணியில் மூழ்கியிருந்ததில் இந்நூலை எதிர்பார்த்த நாளுக்குள் கொண்டு வர முடியவில்லை. அதனால் சற்று தாமதமாகவே வெளி வருகிறது.

நூல் பெரிதாக நீண்டு விலை கூடி விடக்கூடாது என்கிற அச்சத்திலும், எளிய வடிவில் மலிவுப் பதிப்பாக இருக்க வேண்டும் என்கிற விருப்பத்திலும் சாரமான கோட்பாட்டு ரீதியான செய்திகளை மட்டும் சொன்னால் போதும் என்கிற அளவிலும் அப்போதைய அவசரம் கருதியும் மிகச் சுருக்க மாகவே எழுதப்பட்டது இந்நூல்.

எனினும், பிழைத் திருத்தத்திற்காக அச்சகத்தில் இதை மீண்டும் படிக்க நேர்கையில், இதை இன்னும் சற்று விரிவாகவே எழுதியிருக்கலாம் போலவும் தோன்றுகிறது.

என்றாலும், இது குறிப்பிட்ட வட்டத்திற்குள் மட்டுமே தான் செல்லப் போகிறது என்பதால் இதை இதற்கு மேலும் நீட்டி வளவளக்க வேண்டியதில்லை என்றும் பட்டது.

எனவே இந்த அளவிலேயே இந்நூல் வெளி வருகிறது.

நூல் வாசகர்களைச் சென்றடைந்து அவர்கள் கருத்தறிந்து மேலும் விளக்கங்கள், எடுத்துக் காட்டுகள்

படிப்பகம்

www.padippakam.com



தேவைப்பட்டால், அடுத்த பதிப்பில் இதைச் சரி செய்து கொள்ளலாம் என்று மனதை சமாதானம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

தற்போது தமிழகமெங்கும் 'தாய்த் தமிழில் கல்வி கொடு' 'தமிழில் படித்தோர்க்கு வேலை கொடு' என்கிற முழக்கத்தை முன்னிறுத்தி ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டு வருகிறது. இந்த எழுச்சி திசை மாறிப் போய் விடாமலும், பின்னடைவுகளுக்கு ஆளாகாமலும் தாய்த்தமிழின் உரிமை காக்க, உரிய இலக்கில், உரிய திக்கில், முன்னப்போடு முன் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதே எல்லோரதும் அவா.

அந்த நோக்கில், மும்மொழி, இருமொழி, ஒரு மொழிக் கொள்கைகளையும், அதன் கோட்பாட்டுப் பின்னணி களையும் ஒரளவாவது இந்நூல் விளக்குமாயின் அதுவே இந்நூலின் பயனும்.

நூல் ஒரு அவசர முயற்சியில் துவங்கியதில், கையெழுத்துப் படிகளை நெருங்கிய நண்பர்கள் தோழர் களிடம் படிக்கத் தந்து கருத்துக்கள் கேட்டு தேவைப்படும் திருத்தங்களைச் செய்ய வாய்ப்பல்லாது போயிற்று. எனவே நூலில் எக்குறை தென்படினும் அக்குறைகள் அனைத்திற்கும் நானே பொறுப்பு.

அதே வேளை, நூலில் பிழையோ, அல்லது கருத்துத் தெளிவற்ற குழப்பமோ எது இருப்பினும் அதுபற்றி உடனுக்குடன் தகவல் தெரிவித்து. நூலைச் செம்மைப் படுத்த உதவ வேண்டியது நம் எல்லோரது பொறுப்பும்.

நூல் வெளிவர பல்வேறு வகையிலும் உதவிகள் செய்த நண்பர்கள், தோழர்கள்,

நூலை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த கவிக்குயில் அச்சகத்தார் மற்றும் பணியாளர்கள்,

நூலுக்கு மேலட்டை வரைந்து தந்த ஓவியர் ஆனந்தன், அத்துணை பேருக்கும் என் நன்றி.

**மயிலம்** தோழமையுடன்
28-4-99 **இராசேந்திரசோழன்**

படிப்பகம்

www.padippakam.com

# மொழிக் கொள்கை

## மொழியும் சனநாயக உரிமையும்.

மொழி சார்ந்த கொள்கை விளக்கங்களுக்குள் புகுவதற்கு முன் மொழியில் சனநாயக உரிமை குறித்து முதலில் பார்த்து விடுவோம்.

மொழியில் சனநாயக உரிமை எனப்படுவதாவது, ஒரு தேசத்தின் குடிமகன்,

அ. தன் தாய்மொழியிலேயே தொடக்கக் கல்வியிலேயிருந்து உயர் கல்வி வரை கற்கவும், தன் தாய்மொழியிலேயே அனைத்துத் துறை அறிவையும் பெறவும், அவ்வத் துறைகளிலும் ஆராய்ச்சிகள் மேற் கொள்ளவும், தன் தாய் மொழிவாயிலாகவே புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி சாதனைகள் படைக்கவும், ஆன அனைத்து வாய்ப்பு வசதி களுக்கும் உரிமை பெற்றிருக்க வேண்டும்.

ஆ. தான் சார்ந்த குடிமை நிர்வாகம் அனைத்தும் தன் தாய்மொழியிலேயே நடைபெற, அதாவது தான் தன் தாய் மொழியிலேயே ஆளவும், ஆளப்படவும், தன் குறைகளை ஆட்சியாளர்களிடம் மனுச்செய்து கொள்ளவும் பதில் பெற வும், நீதிமன்றங்களில், தன் தாய்மொழியிலேயே முறையீடு கள் செய்து கொள்ளவும் நியாயம் பெறவும், வழக்குகள் தாக்கல் செய்யவும் தீர்ப்பைப் பெறவுமான அனைத்து அலுவல் சார்ந்த உரிமைகளையும் பெற்றிருக்க வேண்டும்.

இ. சமூக நடவடிக்கைகள் அனைத்திலும் தன் தாய் மொழியைப் பயன்படுத்தவும், அதாவது தன் தாய்மொழி

படிப்பகம்

www.padippakam.com



வாயிலாகவே சமூகத்தோடு தொடர்பு கொள்ளவும் சமூக நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவும், தாய்மொழிவாயிலாகவே மத, பண்பாட்டு மற்றும் படைப்பாக்கச் செயல் பாடுகளில் ஈடுபடுவதற்குமான உரிமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட உரிமைகளை ஒரு குடிமகனுக்கு உத்தரவாதப்படுத்துவதையே பொதுவில் 'மொழியில் சனநாயக உரிமை' என்கிறோம். இதையேதான் 'தாய்மொழியே கல்வி மொழி', 'தாய்மொழியே ஆட்சி மொழி', 'தாய் மொழியே தொடர்பு மொழி' என்றும் சொல்கிறோம்.

இப்படி கல்வி மொழி, ஆட்சி மொழி, தொடர் மொழி என்று வகைப்பிரிவு செய்து விளக்குவது மொழியுரிமையைப் புரிந்து கொள்வதற்கான ஒரு வசதி கருதிய அணுகுமுறை தானே தவிர, மற்றபடி, இப்படிச் சொல்வதனாலேயே இவை ஒன்றுக்கொன்று தொடர்பற்ற வெவ்வேறானவை என்றோ அல்லது ஒவ்வொன்றும் தனித்தனியானவை என்றோ பொருள் கொண்டுவிடக் கூடாது.

காரணம், இவையனைத்துமே சாரத்தில் ஒன்றானவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஒன்றில்லாமல் ஒன்று இல்லை என்கிற தன்மை கொண்டவை.

எடுத்துக்காட்டாக, கல்வி மொழி என்பது ஆட்சி மொழியோடும், தொடர்பு மொழியோடும் தொடர்புடையது. ஆட்சி மொழி என்பது கல்வி மொழியோடும், தொடர்பு மொழியோடும் சம்பந்தமுடையது. இவ்வாறே பிறவும்.

எனவே இந்த அர்த்தத்திலேயே இந்த வகைப் பிரிவை விளங்கிக் கொள்ளவேண்டும். இது சார்ந்த மொழியுரிமையையும் புரிந்து கொள்ளவேண்டும்.

## தாய்மொழி சனநாயகம்.

மேற்கண்ட மொழியுரிமை அடிப்படையில் தமிழர்களுக்கு, தமிழக மக்களுக்கு, தாய்மொழி சார்ந்த உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டுமானால்,

படிப்பகம்

www.padippakam.com



அ. தமிழ்நாட்டில் ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை, மருத்துவம், பொறியியல், சட்டம் வேளாண்மை, பிறதொழில் நுட்பம் சார்ந்து உள்ள அனைத்துக்கல்வியும் தமிழ் வழியிலேயே வழங்கப்பட வேண்டும்.

ஆ. தமிழ் நாட்டில் உள்ள தமிழக அரசு நடுவண் அரசு அலுவலகங்கள், மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்திலும் தமிழே அலுவல் மொழியாக, நிர்வாக மொழியாக இருக்க வேண்டும்.

ஆ. தமிழ் நாட்டு மக்கள் தங்களுக்குள்ளும் தமிழக அரசுடனும் தில்லி அரசுடனும் தமிழிலேயே தொடர்பு கொள்ளவும், இறை வழிபாடு, இலக்கியப் படைப்பு பிற விழாக்கள் அனைத்தையும் தமிழிலேயே நடத்தவும், தேவைப்படும் துறைகளை வளப்படுத்தவும் வாய்ப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

ஒரு குடிமகனுக்கு தன் தாய்மொழி தவிர வேறு எந்த மொழியும் தெரியாது என்கிற ஒரே காரணத்திற்காகவே, அக் குடிமகனுக்கு மேற்கண்ட உரிமைகள் எதுவும் மறுக்கப் படக் கூடாது என்பதே மொழியில் அடிப்படை சனநாயக உரிமையாகும்.

இந்த சனநாயக உரிமையின் அடிப்படையிலேயே தமிழர்களுக்கு, தமிழக மக்களுக்கு 'தமிழே கல்வி மொழி', 'தமிழே ஆட்சி மொழி', 'தமிழே தொடர்பு மொழி' என்கிற முழக்கம் முன் வைக்கப்படுகிறது.

மற்றபடி, இவையனைத்தையும் நாம் தமிழிலே கேட்பது, தமிழ் தொன்மையான மொழி, மிகச் செழுமையான இலக்கிய வளமும், இலக்கணச் செப்பமும் மிக்க உயர் தனிச் செம்மொழி என்பதனால் அல்ல. இவையெல்லாம் நம் தாய்த் தமிழுக்கு உள்ள கூடுதல் பெருமைகள், சிறப்புக்கள். அதை எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால் அது நமக்கு இங்கு முக்கியமில்லை. அது எல்லாவற்றிற்கும் மேலாக இங்கு நமக்கு முக்கியமானதும் முதன்மையானதும் தமிழ் நமக்குத் தாய்மொழியாக இருக்கிறது. அதனாலேயே அந்த உரிமையின் அடிப்படையிலேயே நாம் அனைத்தையும் தமிழில் கோருகிறோம். தமிழனாக வாழ விரும்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த அடிப்படையிலேயே நம் தாய்த் தமிழ் சார்ந்த கோரிக்கைகளை நாம் நோக்க வேண்டும். புரிந்து கொள்ள வேண்டும்.

## மொழிக் கொள்கை:

மொழியின் சனநாயக உரிமை சார்ந்து நாம் பார்த்த 'கல்வி மொழி,' 'ஆட்சி மொழி', 'தொடர்பு மொழி' ஆகிய இவற்றுக்கு ஒரு குடிமகன் எந்த மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆட்சியாளர்கள் பரிந்துரை செய்கிறார்களோ, ஆணையிடுகிறார்களோ, சட்டம் இயற்றி வைத்திருக்கிறார்களோ அதுவே அந்நாட்டின் மொழிக் கொள்கை ஆகிறது. அதாவது அது சார்ந்தே மொழிக் கொள்கை உருவாக்கப்படுகிறது. அல்லது ஆட்சியாளர்கள் கொண்டிருக்கிற இம்மொழிக் கொள்கை சார்ந்தே சட்டம் இயற்றப்படுகிறது. ஒவ்வொரு நாடும் தன் அரசமைப்புச் சட்டத்தின் வாயிலாக தனது மொழிக் கொள்கையை விளம்புகிறது.

இந்தியா பல்மொழி பேசும் பல்தேசிய இன நாடு என்பது அனைவரும் அறிந்த, அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு உண்மை.

இதன்படி அந்தந்த தேசிய இனங்களும் அவரவர் தாய் மொழியையே 'கல்வி மொழியாக' 'ஆட்சி மொழியாக' 'தொடர்பு மொழியாக' பயன்படுத்த உரிமை பெற்றிருக்க வேண்டும். ஆனால் இந்திய அரசமைப்புச் சட்டம் அப்படிப் பட்ட உரிமைகள் எதையும் இந்தியாவில் உள்ள பல தேசிய இனங்களுக்கு வழங்கியிருக்க வில்லை. தமிழ்த் தேசத்திற்கும் அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறு, இந்தியாவில் உள்ள பல தேசிய இனங்கள் தங்கள் தாய்மொழியையே கல்வி மொழியாக ஆட்சி மொழியாக தொடர்பு மொழியாக பயன்படுத்த அதிகாரமற்றவர்களாக அதற்கு உரிமையற்றவர்களாக ஆக்கி வைத்திருக்கிறது 'இந்திய அரசமைப்பு'

இந்தியாவிலுள்ள பல தேசிய இனங்களுக்கு தமிழகத்துக்கு இப்படி ஒரு நிலை ஏன் ஏற்பட்டது என்பதற்கான

படிப்பகம்

www.padippakam.com

வரலாற்றுக் காரணங்கள் பல. அவற்றையெல்லாம் விரிவாக ஆராய்வது இங்கு நமக்கு நோக்கமல்ல. அது சாத்தியமுமல்ல.

எனில் சுருக்கமாக ஒரு விஷயத்தை மட்டும் தெரிந்து கொள்வோம். தங்கள் நிர்வாக வசதிக்காக இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளை ஒன்றிணைத்து ஏக இந்தியாவாக ஆக்கி ஆண்ட வெள்ளையர்கள் தாங்கள் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்க முன் வந்த போது இந்தியாவில் உள்ள தேசிய இனங்களை அழைத்து நீங்கள் எந்த மாதிரியான சுதந்திரத்தை விரும்புகிறீர்கள் என்று கேட்கவில்லை. சுதந்திரம் என்பதன் பெயரால் ஆட்சியதிகாரத்தைப் பெற்ற தில்லியும், இந்தியாவில் உள்ள பல்மொழி பேசும் பல் தேசிய இன மக்களையும் கூட்டி நாம் எந்த மாதிரியான அரசமைப்பை உருவாக்கிக் கொண்டு வாழலாம் என்றும் கருத்து கேட்கவில்லை.

இப்படி யாரையும் கேட்காமல், சர்வாதிகாரமாக, அனைத்து அதிகாரங்களையும் தங்களது கைகளிலே குவித்து வைத்துக் கொண்டு தில்லி ஆட்சியாளர்கள் உருவாக்கிக் கொண்டதுதான் இந்திய அரசமைப்பு. அதையொட்டி உருவாக்கப்பட்டதுதான் தில்லி அரசின் மொழிக் கொள்கை. இம்மொழிக் கொள்கையின் விளைவுதான் தமிழ் உரிமை மறுப்பு. தமிழுக்கான சனநாயக மறுப்பு.

## மும்மொழித் திட்டம்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மொழிபற்றிக் கூறும் பகுதி 17ல் உள்ள சட்டப் பிரிவு 343. 'இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி' என்கிறது.

அதாவது இந்தியாவில் பல்வேறு மொழிகள் பேசப்பட, அவற்றுள் பல இந்தியை விட தொன்மையும் வளப்பமும் மிக்கதாக இருக்க அவற்றையெல்லாம் மறுத்து, நிராகரித்து இந்தியை மட்டுமே ஆட்சிமொழி என்கிறது.

அதே வேளை. ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட ஆங்கிலப் பழக்கத்திலிருந்து தற்போது சட்டென்று இந்தி

படிப்பகம்

மொழிக்குத் தாவுவது உடனடியாக சாத்திய மற்றது சிரமமானது என்பதோடு, திடீரென்று எல்லாம் இந்திதான் என்று இந்திக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவது கடும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் உருவாக்கலாம் என்பதை உணர்ந்த ஆட்சியாளர்கள் அதற்கும் பொருத்தமாக சில உட்பிரிவுகளைச் சேர்த்தார்கள்.

அதே பிரிவின் உட்பிரிவின் 2ன்வழி அன்றிலிருந்து அதாவது அரசமைப்புச் சட்டம் செயலுக்கு வந்த 1950ம் ஆண்டிலிருந்து ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு ஆங்கிலமும் தொடர்ந்து அலுவல் மொழியாகப் பயன்படுத்தப்படுவதற்கு வாய்ப்பளித்து ஆங்கிலம் துணை ஆட்சி மொழியின் நிலையில் நீடிக்க வகை செய்யப்பட்டது. இவ்வகையில் இந்தியும் ஆங்கிலமும் அதிகாரத்தில வைக்கப்பட்டு, இந்தியாவெங்கிலும் இவ்விரு மொழிகளுமே ஆதிக்கம் செலுத்த வழிவகுக்கப்பட்டது.

பிரிவு 345. அந்தந்த மாநிலத்திலும் அந்தந்த மாநில சட்ட மன்றம் நிறைவேற்றி தில்லி அரசின் ஒப்புதல் பெற்ற ஒரு சட்டத்தின் மூலம் அந்தந்த மாநிலத்திலும் நடப்பில் உள்ள மொழியை ஆட்சி மொழியாகக் கொள்ள வழி வகை செய்கிறது.

இப்பிரிவின்படி தமிழ் நாட்டிற்கு இயல்பாக 'தமிழ்' ஆட்சி மொழியாகியது. 1956ல் தமிழக சட்ட மன்றத்தில் கொண்டு வரப்பட்ட 'தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தின் மூலம் தமிழ் நாட்டில் தமிழே ஆட்சி மொழி என்பது உறுதி செய்யப்பட்டது.

இந்தச் சட்டமே இங்கே சரியாக ஒழுங்காக நடைமுறைப் படுத்தப் படவில்லை என்கிற பெருங்குறைபாடு ஒரு புறம் இருக்கிறது. அதையாரும் மறுப்பதற்கில்லை. அது வேறு தனிக்கதை.

எனில், இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டியது, மும்மொழிக் கொள்கை எனச் சொல்லப்படும் கோட்பாட்டின் சட்ட வேர்கள் எங்கே நிலை கொண்டிருக்கின்றன என்பது தான். அதன் வழி தமிழ் மொழியுரிமைகள் எவ்வாறு மறுக்கப்பட்டு வருகின்றன என்பதுதான்.

படிப்பகம்

 www.padippakam.com 

## இருமொழிக் கொள்கை

மும்மொழிக் கொள்கையின் சட்ட வேர்கள் எதுவானாலும் அது பற்றிய வெகுமக்கள் கருத்து. தமிழ் நாட்டுக்குத் தமிழ், இந்தியாவுக்கு இந்தி, உலகத்துக்கு ஆங்கிலம் என்பதாகப் பரப்பப்பட்டு அதுவே நியாயப்படுத்தப்பட்டும் வருகிறது.

மும்மொழிக் கொள்கையின் இவ்வெகு மக்கள் கருத்திலிருந்தும், அதன் நியாயப்படுத்தலிருந்தும், வாத அடிப்படையில் அதை எதிர்த்து அதற்கு மாற்றாக முன் வைக்கப்படும் நிலைப்பாடுகளில் ஒன்றே 'இருமொழிக் கொள்கை'

இது சொல்வதாவது. தமிழ் நாட்டுக்குத் தமிழ் உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் என்றால் அந்த உலகத் தொடர்புக்கான ஆங்கிலத்தை வைத்தே ஏன் இந்தியாவின் பிற பகுதிகளோடும் தொடர்பு கொள்ளமுடியாது. அதற்கென்று தனியாக ஒருமொழியை, இந்தியை ஏன் கற்க வேண்டும், வேண்டாம்.

எனவே அந்த இந்தியை நீக்கி விட்டு தமிழ் நாட்டுக்குத் தமிழ், தமிழ்நாட்டை விட்டுத் தாண்டிய வெளித் தொடர்புக்கு அது இந்தியாவின் பிற பகுதிகளானாலும் சரி. அல்லது இந்தியாவை விட்டுத் தாண்டிய உலகின் வேறு பகுதிகளானாலும் சரி எல்லாவற்றுக்கும் ஆங்கிலம் என, தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் மட்டும் போதும் என இதை வைத்து இக்கொள்கை வலியுறுத்தப்படுகிறது.

இதன் வழி தமிழ் தமிழ் நாட்டில் மழலையர் கல்வி, தொடக்கக் கல்வியிலேயிருந்து ஆங்கில வழியிலே கற்பதையும், உயர்கல்வியனைத்தும் ஆங்கிலத்திலேயே இருப்பதையும், நிர்வாக நடைமுறைகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே நீடிப்பதையும் இக்கொள்கை ஊக்குவிக்கிறது. அல்லது அதற்குத் துணைபோகிறது.

அதோடு ஆங்கிலத்தை இம்மாதிரிப் ப பன்பாட்டிலிருந்து அகற்றினால் அதாவது கல்விக் கூடங்கள் நிர்வாக அலுவலகங்கள் ஆகியவற்றிலிருந்து ஆங்கிலத்தை அகற்றினால்

படிப்பகம்

www.padippakam.com



அந்த இடத்தில் இந்தி வந்து குந்தி விடும் என்று பூச்சாண்டி காட்டுகிறது.

எனவே, இந்தி வந்து குந்தாமல் தடுக்க, தமிழைப் பாது காக்க ஆங்கிலமே கேடயமாகப் பயன்படுகிறது. என்று சொல்லி ஆங்கிலத்லதைப் பாதுகாப்பதில் இக்கொள்கை அக்கறை செலுத்தி வருகிறது. இதனால் தமிழ் மொழியின் வளர்ச்சியிலோ அதன் நலனிலோ முன்னேற்றத்திலோ அக்கரையற்று வாளாயிருந்து தமிழுக்குத் துரோகமிழைத்து வருகிறது.

## ஒரு மொழிக்கோட்பாடு.

மும்மொழித் திட்டத்திற்கும், இருமொழிக் கொள்கைக் கும் மாற்றாக முன் வைக்கப்படுவதே ஒரு மொழிக் கோட்பாடு.

'தமிழே கல்வி மொழி', 'தமிழே ஆட்சி மொழி', 'தமிழே தொடர்பு மொழி' என்பதே இதன் தாரக மந்திரம்.

இதன்படி தமிழ் நாட்டில்,

(அ) மழலையர் கல்வி, தொடக்கக் கல்வி முதல் பல்கலைக்கழகங்கள், தொழிற்கல்விகள், மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை, பிறதொழில் நுட்பம் உள்ளிட்டு, பிற ஆராய்ச்சிக் கல்வியனைத்தும் தமிழிலேயே வழங்கப்பட வேண்டும்.

(ஆ) தமிழ் நாட்டில் உள்ள தமிழக அரசு அலுவலகங் கள், அஞ்சல், தொலை தொடர்பு, தொடர்வண்டி, வங்கிகள் வாழ்நாள் காப்பீட்டுக்கழகங்கள், முதலான நடுவண் அரசு அலுவலகங்கள், பிறபொதுத்துறை தனியார் துறை நிறுவனங்கள் ஆகிய அனைத்திலும் தமிழே அலுவல் மொழி யாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

(இ) தமிழர்கள் தங்கள் குடிமைசார் தொடர்புகளுக்கு பண்பாட்டு நடவடிக்கைகளுக்கு, படைப்பாக்கச் செயல்பாடு களுக்கு இறைவழிபாட்டுக்கு, தமிழையே பயன்படுத்தும் உரிமை பெற்றிருக்க வேண்டும். வானொலி, தொலைக்

படிப்பகம்

www.padippakam.com



காட்சி நிகழ்ச்சிகள் உட்பட அனைத்தையும் தமிழில் பெறும் உரிமை உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

எனில், இப்படிப்பட்ட ஒரு நிலை இன்று தமிழகத்தில் இல்லை. எங்கும் ஆங்கிலமும் இந்தியுமே கோலோச்சி வருகிறது. எல்லா நிலைகளிலும் இவ்விரு மொழிகளுமே ஆதிக்கம் சொத்து வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம், இந்திய அரசமைப்புச் சட்டம். அது உருவாக்கி வைத்திருக்கும் மும்மொழிக் கொள்கை. இதுவே இந்தியும் ஆங்கிலமும் மேலாதிக்கம் செலுத்த வழி வகுக்கிறது.

இதற்கு மாற்றாக முன்வைக்கப்படும் இருமொழிக் கொள்கையும், மேற்கண்ட செயல்பாடுகளில் இந்தியை மட்டுமே நீக்கி, ஆங்கிலத்தை நீட்டிக்க வைப்பதால், அதை ஆதரித்து அதற்குத் துணை நிற்பதால், இக்கொள்கை வழியும் தமிழுக்கு விமோசனமில்லை.

எனவே, மும்மொழிக் கொள்கை, இருமொழிக் கொள்கை இரண்டுமே நாம் தொடக்கத்தில் பார்த்த மொழியுரிமைக்கும் சனநாயகத்திற்கு எதிரானதாகும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தடையானதாகும்.

இந்த அடிப்படையிலேயே மும்மொழிக் கொள்கை மோசடிக் கொள்கை, இருமொழிக் கொள்கை ஏமாற்றுக் கொள்கை. ஒரு மொழிக் கொள்கையே உண்மைக் கொள்கை. அதுவே நமது உரிமைக்கொள்கை என்று முழங்கு கிறோம். அவ்வுரிமைக் கொள்கையை நிலைநாட்டுவதற் கான திட்டங்களை முன்னிறுத்திச் செயல்படுகிறோம்.

காரணம் இதுஒன்றே தமிழின் சனநாயக உரிமையைப் பாதுகாக்கும் மொழிகளின் சமத்துவத்திற்கு உத்திரவாதம் அளிக்கும். தமிழ் நாட்டில் எங்கும் எதிலும் தமிழ் என தமிழ் தழைக்க, அனைத்து நிலைகளிலும் தமிழே கோலோச்ச வழி வகுக்கும்.

இதை மேலும் தெளிவாகவும் ஆழமாகவும் புரிந்து கொள்வதற்கும் இதையொட்டி எழும் சில கேள்வி

படிப்பகம்

களைச் சந்திப்பதற்கும் முன் இந்த ஏமாற்று, மோசடித் திட்டங்களைப் புரிந்து கொண்டு மேலே செல்வோம்.

## ஏமாற்றுக் கொள்கை.

வெள்ளை ஏகாதிபத்தியம் தன் நிர்வாக வசதிக்காகவும், ஆதிக்க நலனுக்காகவும் ஆங்கிலக் கல்வியை 1835 மார்ச் 7ம் நாள் அறிமுகப் படுத்திய போது மெக்காலே சொன்னான்:

"இந்தியர்கள் அனைவரும் தோற்றத்தாலும் நிறத்தாலும் இந்தியர்களாயிருந்தாலும் அவர்கள் உள்ளத்தாலும் உணர்வாலும் உளவியல் உருவாக்கத்தாலும் தங்களை ஆங்கிலேயர்கள் போல் உணரச் செய்யவேண்டும்".

இந்நோக்கில் அத்திட்டம் பெருமளவில் வெற்றியும் பெற்றது. ஆங்கிலக் கல்வி இந்தியா முழுக்கவும் தமிழகம் முழுக்கவும் பரவி ஆங்கிலம் அறிந்திருப்பது பெருமைக்கும் மேன்மைக்கும் உரியதாகக் கருதப்பட்டது. ஆங்கிலம் அறிந்தவர்களெல்லாம் அறிவாளிகளாகவும் மேதாவிகளாகவும் வைத்து எண்ணப்பட்டனர்.

இக்கருத்து, வெள்ளையர் ஆட்சி போய் 52 ஆண்டுகள் கடந்த பின்னும் இன்னும் பெருமளவும் எந்த மாற்றமும் இல்லமால் அப்படியே நீடித்து வருவதோடு மேலும் பல பொய்யான பிரம்மைகளையும் கூடுதலாக்கி வளர்த்து விட்டிருக்கிறது.

இதன் காரணமாக் இன்னமும் ஆங்கிலம் அறிந்தவரெல்லாம் அறிவாளிகளாகவும் மேதைகளாகவும் கருதப் பட்டு வருவதும், அவர்கள் சமூகத்தின் உயர்நிலையிலே வைத்து மதிக்கப்பட்டு வருவதும், தொடர்ந்து வருகிறது. அதோடு இது, ஆங்கிலம் கற்றால் உலகின் எந்த மூலைக்கும் வேலைக்குப் போகலாம் என்கிற மயக்கத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

இது தொடர்பாக நாம் புரிந்து கொள்ள வேண்டியது:

(அ) ஆங்கிலம் அறிந்ததனாலேயே ஒருவர் அறிவாளியாகி விடமுடியாது. எல்லா மொழியிலும் அறிவாளிகளும்

www.padippakam.com


உண்டு. முட்டாள்களும் உண்டு. இதுவேதான் ஆங்கிலத்திற்கும்.

(ஆ) உலகம் முழுவதும் ஆங்கிலம் பேசுகிறார்கள். ஆங்கிலம் படித்தால் எங்கு வேண்டுமானாலும் வேலைக்குப் போகலாம் என்பது பொய். இன்று உலகில் இங்கிலாந்தில் அமெரிக்காவில், ஆஸ்திரேலியாவில். கனடாவின் ஒரு பகுதி யில் மட்டுமே ஆங்கிலம் பேசுகிறார்கள்.

மற்றபடி பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான், சீன போன்ற முன்னேறிய நாடுகளிலோ, க்யூபா, வியட்நாம், கொரியா போன்ற வளர்முக நாடுகளிலோ அனைவரும் தங்கள் தாய் மொழியிலேயே கல்வி கற்கின்றனர். ஆராய்ச்சி செய் கின்றனர். அறிவியல் தொழில் நுட்பச் சாதனைகள் படைக்கின்றனர்.

இவர்களில் நோபல் பரிசு பெற்ற பல விஞ்ஞானிகளுக்கு ஆங்கிலமே தெரியாது என்பதே உண்மை.

நிலைமை இவ்வாறு இருக்க இதையெல்லாம் மூடி மறைத்து. அல்லது இதுபற்றி அறியாது இங்கு பொய்ப் பிரச்சாரம் அல்லது தவறான பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

(இ) தவிர, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஆங்கிலத்தை துணை ஆட்சி மொழியின் நிலையில் வைத்தது இந்தியா முழுக்க இந்தியைப் பரப்ப ஒரு இடைக்கால ஏற்பாடாகத்தானே தவிர, உலகத் தொடர்புக்காக அல்ல. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் யாரும் அப்படிச் சொல்லவுமில்லை;

(ஈ) அதே போல ஆங்கிலம் தமிழைப் பாதுகாக்கும் கேடயம் என்பதும் பொய். உண்மையைச் சொல்லப் போனால் ஆங்கிலம் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் தடைக்கல்லாக முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது என்பதே மெய்.

எனவே, இக்காரணங்களாலேயே ஆங்கிலத்திற்குத் துணைபோகும் இந்த இருமொழிக் கொள்கையை ஏமாற்றுக் கொள்கை என்கிறோம். அதை நிராகரிக்கக் கோருகிறோம்.

படிப்பகம்

 www.padippakam.com 

## மோசடிக் கொள்கை.

வெள்ளை 'விதேசிக் கொள்கை'க்கு மாற்றாக இந்திய 'சுதேசிக் கொள்கை'யை முன் வைந்த இந்திய ஆதிக்க சக்திகளுக்கு ஆங்கில விதேசி மொழிக்கு எதிராக ஒரு சுதேசி மொழி தேவைப்பட்டது. அதற்கு இந்துத்துவ சாயலோடு கூடிய இந்தி மொழி முன்னிறுத்தப்பட்டது. இது இந்திய தேசியம் என்பதன் பேரால் நியாயப்படுத்தப்பட்டது.

'இந்திய தேசியம்' என்பதே முதலாளிய, பார்ப்பனிய, இந்தி ஆதிக்க சக்திகளின் கருத்தாக்கம் என்பது வரையறை. அதாவது முதலாளிய, பார்ப்பனிய, இந்தி ஆதிக்க சக்திகளின் நலன்காக்கும் கருத்தாக்கமே 'இந்திய தேசியம்' என்பது இதன் பொருள்.

இதனால்தான். வெள்ளையரை எதிர்த்த போராட்டத்தின் போதே இந்தியா முழுக்கவும் இந்தியைப் பரப்ப, சுதந்திரத் திற்குச் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பே 1918லேயே தட்சிணபாரத இந்தி பிரச்சார சபா என்னும் அமைப்பை உருவாக்கி தமிழகத்திலும் இந்தியைப் பரப்பினார்கள். பிறகு சுதந்திர இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்திலும் அதை அதிகாரத்தில் வைத்தார்கள்.

எனில், இதையெல்லாம் மூடி மறைந்து ஆட்சியாளர்கள், இந்தி பெரும்பான்மை மக்களால் பேசப்படும் மொழி என்பதால் அதை அதிகாரத்தில் வைத்ததாக அதற்கு சனநாயக அரிதாரம் பூசியும், இந்தி படித்தால் இந்தியா முழுவதும் வேலைக்குப் போகலாம் என்று போலி வாக்குறுதிகள் தந்தும் பசப்பி வருகிறார்கள்.

முதலாவதாக இந்தி பெரும்பான்மை மக்களால் பேசப் படும் மொழி என்பதே பொய். இந்தியாவில் உள்ள மக்களை இந்தி பேசுவோர், இந்தி பேசாதோர் எனப்பிரித்தால் இந்தி பேசாதோர் எண்ணிக்கையே அதிகம்.

இந்தி பேசுவோர் தனிப்பெரும்பான்மை என்கிற வாதத்தை வைப்பதானாலும் அத் தனிப் பெரும்பான்மை, இந்தி பேசுவதாகக் கருதப்படும் மாநிலங்களில் நிலவும் பல்வேறு மொழிகள் மைதிலி, போஜ்புரி, கரிபோடி, சந்தாலி முதலான மொழி பேசுவோரையும் உள்ளடக்கியதாகவே

படிப்பகம்

www.padippakam.com



அவ்வெண்ணிக்கை உள்ளது. இவர்களும் இந்தி ஆதிக்கத்தால் தங்கள் மொழி வளர்ச்சி பாதிக்கப்படுவதாக கருதக் கூடியவர்கள் என்பது உண்மை.

ஒரு வாதத்திற்காக தனிப் பெரும்பான்மை மக்கள் இந்தி மொழி பேசுவதாவே வைத்துக் கொண்டாலும் இதற்காக மற்ற அனைவரும் அம்மொழியைக் கற்க வேண்டும் என்பது எந்த வகையிலும் நியாயமற்றது. அது சனநாயக விரோத மானது. சர்வாதிகாரப் போக்குடையது. பிற மொழிகளின் உரிமைகளையும் சமத்துவத்தையும் மறுப்பது.

தவிர, இம்மும்மொழிக் கோட்பாடு என்பது, அதாவது தமிழ்நாட்டுக்குத் தமிழ், இந்தியாவுக்கு இந்தி, அதுவரைக்கும் ஆங்கிலம் என்பது. இந்தி பேசாத தேசிய இனங்களுக்குத் தானே தவிர, இந்தி பேசும் மாநிலங்களுக்கு, தேசிய இனங் களுக்கு அல்ல. காரணம் அவர்களுக்கு தாய் மொழியும் இந்தி ஆட்சி மொழியும் இந்தி. எனவே அவர்கள் ஆங்கிலம் கற்க வேண்டிய அவசியமும் இல்லை. பிற தேசிய இனமொழி களையும் கற்பதில்லை.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிற இந்திய அரசமைப்பு, இந்தி ஆட்சி மொழிச் சட்டத்தின் மூலம் ஒரு கண்ணுக்கு வெண்ணெய்யும், மறுகண்ணுக்கு சுண்ணாம்பும் தடவுகிறது. மொழிகளிடையே பாரபட்சத்தையும் அசமத் துவத்தையுப் உருவாக்கி இந்தியை ஆதிக்கத்தில் வைக்கிறது'

அடுத்து, இந்தி படித்தால் இந்தியா முழுக்க வேலைக்குப் போகலாம் என்பது பற்றி......

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்சள் பல்லாயிரக்கணக்கில் அவர்கள் சொந்த மாநிலங்களிலேயே வேலை வாய்ப்பற்று வெளி மாநிலங்களில் வேலை தேடி அலைந்து திரிகின்றனர். இந்த நிலையில் அவர்களைவிட மோதவியாய் இந்தி கற்று, அதை வைத்து எவரும் அங்கே வேலைக்குப் போய்விட முடியும் என்பது மாயை. மற்ற திறமைகள் இருந்து வேலை வாய்ப்பு கிடைத்தால் இந்தி தெரிந்திருப்பதும் ஒரு வகையில் பலன் தரும் என்று வேண்டு மானால் சொல்லலாம். இது இந்தி மொழிக்கு மட்டுமல்ல. எல்லா மொழிக்கும் பொருந்தும்.

படிப்பகம்

www.padippakam.com



இப்படிப்பட்ட தில்லுமுல்லுத் திட்டங்களையும் நோக்கங்களையும் கொண்டிருப்பதனாலேயே இம்மும் மொழிக் கொள்கையை மோசடிக் கொள்கை என்கிறோம்.

## உண்மைக் கொள்கை.

மும்மொழிக் கொள்கையும், இருமொழிக் கொள்கையும் தமிழுக்கு எதிரானதாக, தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதனாலேயே, அவை சனநாயக விரோத சமத்துவமற்ற ஆதிக்கத்தன்மை கொண்டதாக இருப்பதனாலேயே நாம் இவற்றை நிராகரித்து, ஒரு மொழிக் கொள்கையை அது நம் உரிமைக் கொள்கை என்ற அடிப்படையிலும் அதுவே உண்மைக் கொள்கை என்ற அடிப்படையிலும் முன்னிறுத்து கிறோம்.

இந்த அடிப்படையிலேயே 'தமிழே கல்வி மொழி' 'தமிழே ஆட்சி மொழி', 'தமிழே தொடர்பு மொழி' என்கிற கோரிக்கையையும் நாம் முன் வைக்கிறாம்.

இக்கருத்து பொதுவில் பலராலும் ஏற்கப்பட்டாலும், இதையொட்டி சிலருக்கு வேறு சில கேள்விகளும் எழுகின்றன அவையாவன:

அ. தமிழ் மட்டுமே தெரிந்து பிற மொழி எதுவுமே தெரியாவிட்டால் ஒரு குடிமகனின் முன்னேற்றம், வளர்ச்சி பாதிக்கப்படாதா...?

படாது. காரணம், முதலாவதாக ஒரு மொழிக் கொள்கையை நாம் வலிவுறுத்துவதனால் ஒருவர் பிறமொழி எதையுமே கற்றுக் கொள்ளக்கூடாது என்று அர்த்தமல்ல. ஒரு மொழிக் கொள்கையின் நோக்கமும் அதுவல்ல, ஒரு மொழிக் கொள்கையின் சாரம், ஒரு குடிமகனுக்கு அறிவுக் கருவூலத்தின் அனைத்துச் செல்வங்களும் அவன் தாய் மொழியில் இருக்க வேண்டும் என்பதும், அவன் மீது கட்டாயப்படுத்தியோ, வலுவந்தமாகவோ வேறு எந்த மொழியையும் திணிக்கக் கூடாது என்பதும்தான். எனவே ஒருவர் விரும்பும் எந்த ஒரு மொழியையும், அது எத்தனை மொழிகளானாலும் விருப்பத்தின் அடிப்படையில் தேவை யின் அடிப்படையில் அவர் கற்பதற்கு ஒருமொழிக் கொள்கை எந்த வகையிலும் தடையாய் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



அடுத்து, பள்ளியிறுதி வகுப்பு, பட்டப்படிப்பு அனைத்தையும் தன் தாய்மொழியிலேயே படித்த ஒருவர் தான் தன் தாய்மொழியில் அல்லாத உயர்கல்வி அல்லது ஆராய்ச்சிக் கலவியைப் பெற விரும்பினால் அக்கல்வி எம் மொழியில் உள்ளதோ, அம்மொழியை ஆறு மாதத்தில் கற்றுத் தேர்ந்து விடலாம் என மொழியியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். கூறுவதோடு மட்டுமல்ல. நடைமுறையிலும் இது சாதிக்கசப்பட்டு வருகிறது. இதையே 2 துறைசார் மொழி என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். இந்த துறைசார் மொழியைக் கற்று ஒருவர் எம்மொழி சார்ந்த அறிவுக்களஞ்சி யத்தையும் அடைவதற்கும் ஒரு மொழிக்கொள்கை எவ் வகையிலும் தடையாய் இல்லை.

எனவே ஒரு மொழியை மட்டுமே கற்று வேறுபிற எந்த மொழியையும் கற்காமலிருப்பது என்கிற பேச்சுக்கே இதில் இடமில்லை.

ஆ. ஒரு மொழிக் கொள்கை தமிழ்நாட்டுக்குள் சரி, ஆனால், தமிழ்நாட்டைத் தாண்டிய வெளித்தொடர்பு களுக்கு...? என்பது அடுத்த கேள்வி.

தமிழ்நாட்டைத் தாண்டிய கல்வித் தொடர்பு எனில் மேற்கண்ட விளக்கமே போதும்.

கல்வியல்லாத பிற தொடர்புகளுக்கு எனில் அதை இரண்டு வகையாகப் பிரித்துக் கொள்வோம்.

ஒன்று, ஒரு குடிமகன் குடிமை சார்ந்த நிர்வாகங்களுக் காக அரசு அலுவலகங்கள், பிற நிறுவனங்களோடு தொடர்பு கொள்வது. மற்றொன்று தன் தனிப்பட்ட தொழில், வணிகம், வேலைவாய்ப்பு இவற்றுக்காக தொடர்பு கொள்வது.

இதில் முதல் சொன்ன குடிமை சார்ந்த தொடர்புகளுக்கு அது சார்ந்த அலுவலகங்கள், நிறுவனங்கள் அது மாநில அரசுக்குச் சொந்தமானாலும் சரி, நடுவண் அரசுக்குச் சொந்தமானாலும் சரி, அது தமிழ் நாட்டுக்குள் இருந்தாலும் சரி, தமிழ்நாட்டுக்கு வெளியே தில்லி ஆட்சிக்கு உட்பட்டு எங்கிருந்தாலும் சரி அவரவரும் தங்கள் தாய் மொழியிலேயே தொடர்பு கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



என்பது ஒரு மொழிக் கொள்கையின் சாரம். அந்த வகையில் தமிழர்களாகிய நமக்கு தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளும் உரிமை உறுதி செய்யப்பட வேண்டும்.

இதற்கு தமிழ் உள்ளிட்டு, இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய இன மொழிகளும் தில்லியிலே ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும். இப்படி ஆக்கப்படும் போது மட்டுமே தமிழர்களுக்கு இந்த உரிமை சாத்தியம்.

அடுத்தது, தனிப்பட்ட தொழில், வணிகம், வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்டது. இதற்கு பொதுவாக ஒரு மொழியைச் சொல்ல முடியாது. அப்படிச் சொல்வதும் சாத்தியமில்லை. காரணம், இது தமிழ் நாட்டிற்குள்ளானால் தமிழிலும், தமிழ் நாட்டைத் தாண்டினால் அவர் எந்த மொழிப் பகுதியோடு தொடர்பு கொள்ளவேண்டி நேர்கிறாரோ அந்தந்தப் பகுதி மொழியிலும் நடைபெறுவதாக அமையும்.

எடுத்துக்காட்டாக வங்கத்தோடு தொடர்புகொள்ள நேர்கிறவர் வங்க மொழியையும், பஞ்சாபோடு தொடர்பு கொள்ள நேர்கிறவர் பஞ்சாபி மொழியையும் சவூதியோடு தொடர்பு கொள்ள நேர்கிறவர் அராபிய மொழியையும் இயல்பாக அறிந்து அவ்வப்பகுதி மொழியிலும் தொடர்பு கொள்ள பயிற்சி பெற்று விடுகிறார். தனிப்பட்ட தொழில், வணிகம், வேலைவாய்ப்பு சார்ந்த பிரச்சனைகளில் இத் தொடர்புகள் இயல்பாக அவரவர் தேவை சார்ந்தே நிகழ்ந்து, வருகின்றன. இதனால் பொதுவான மொழி குறித்து இங்கே பேசவேண்டிய தேவை எழவில்லை.

எனவே, 'தமிழே கல்வி மொழி', 'தமிழே ஆட்சி மொழி', 'தமிழே தொடர்பு மொழி' என்று நாம் சொல்லும்போது இந்த அடிப்படையிலே இதைக் குறிப்பிடுகிறோம் என்பதையும், இந்த அடிப்படையிலேயே ஒருமொழிக் கொள்கையாம் உரிமைக் கொள்கையை உண்மைக் கொள்கையை நாம் நிலை நாட்டுகிறோம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இனி, இதன் நடைமுறை செயலாக்கம் குறித்தும் அது சார்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் காண்போம்.

படிப்பகம்

www.padippakam.com



கல்வித் துறையில்,

ஒரு மொழிக் கொள்கையின் நோக்கம் தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வியிலேயிருந்து, உயர்கல்வி, ஆராய்ச்சிக் கல்வி வரை அனைத்துக் கல்வியும் தாய்மொழியில், அது நம் தமிழ் மொழியில் என்பதேயாம்.

இதை நிறைவேற்றுவதற்கு அரசமைப்புச் சட்டமும், அதன் மும்மொழிக் கொள்கையுமே தடையாக இருக்கின்றன; தவிர, மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியும் அவசர நிலைக் காலத்தின்போது நடுவண் அரசு பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டது.

இதனால் தாய்மொழிக் கல்வி நிறைவேற்றத்தில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. எனினும், மாநில அரசு தன் அதிகாரத்துக்கு உட்பட்டு ஆற்ற வேண்டிய பணிகளே இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் உள்ளன.

முதலாவதாக, தமிழ் நாட்டில் ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை அனைத்துக் கல்வியும் தமிழில் என்கிற குறிக்கோளை எட்டும் வகையில், தன் அதிகாரத்துக் குட்பட்ட கல்வி நிலையங்களில் இதை அமலாக்கும் வகையில் தமிழக அரசு ஆணைகள் பிறபித்து அவற்றை செயலாக்க வேண்டும். இது ஒரு நாளில் நிறைவேறுகிற காரியமில்லை. படிப்படியாக பல இடைக் கட்டங்களைக் கடந்து நிறைவேற்றப்பட வேண்டிய காரியம் என்ற போதிலும் அரசு இதையே சொல்லிக் கொண்டிருக்காமல், அதற்கான திசை வழியில் செயல்பட முனைய வேண்டும். இதற்குரிய ஆலோசனைகளாவன:

1. தமிழக அரசாலும் தமிழக அரசு அங்கீகாரம் பெற்றும் நடத்தப்பெறுகிற கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் தமிழே கல்வி மொழியாக இருக்க வேண்டும். ஆங்கிலம் கல்வி மொழியாக இருக்கக் கூடாது. அதற்கு அங்கீகாரமும் அளிக்கக் கூடாது. ஆங்கிலம் ஒரு பாடமொழியாக வேண்டுமானால் இருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com



2. தமிழ் நாட்டில் தில்லி அரசாலோ, வேறு மொழிச் சிறுபான்மையினராலோ, தமிழல்லாத வேற்று மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு நடத்தப் பெறும் பள்ளிகளில் தமிழ் கட்டாயம் ஒரு மொழிப்பாடமாக இருக்க வேண்டும்.

3. தமிழ் நாட்டில் தமிழை ஒரு மொழிப் பாடமாகக் கூட கற்பிக்காத பள்ளிகள் தடை செய்யப்பட வேண்டும். தமிழக மக்களும் இப்பள்ளிகளைப் புறக்கணிக்க வேண்டும்.

4. தமிழக உயர் கல்வியனைத்தையும், எடுத்துக் காட்டாக பல்கலைக் கழகங்கள் அனைத்தையும் கட்டுப் படுத்துகிற 'பல்கலைக்கழக மானியக் குழு' மருத்துவம், பொறியியல், சட்டக் கல்விக்கான அகில இந்தியக் குழுக்கள், அந்தந்த மாநில அதிகாரத்திற்குட்பட்டதாக ஆக்கப்பட்டு, அந்தந்த தேசிய இன மொழியிலேயே கல்வியைக் கற்பிக்க, உரிய ஏற்பாடுகள் வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

5. இப்படியெல்லாம் செய்வதற்கு போதுமான நூல்கள் இல்லை. கலைச் சொற்கள் இல்லை. நிதியாதாரங்கள் இல்லை என்று சும்மா பிலாக்கணம் பாடிக் கொண்டிருப் பதை விட்டுவிட்டு, இதற்கான செயல் திட்டத்தை வகுத்து, வெட்டிச் செலவுகளைக் குறைத்து இத்திட்டச் செலவு களுக்கு நிதியொதுக்கீடு செய்ய அரசு முன்வர வேண்டும்.

6. சிறு சேமிப்பு. குடும்பக் கட்டுப்பாடு, எயிட்ஸ் விழிப்புணர்வு பிரச்சார இயக்கங்கள் நடத்துவது போல தாய்மொழிக் கல்விக்கும் விழிப்புணர்ச்சி, பிரச்சார இயக் கங்கள் நடத்த அரசு நிதியொதுக்கீடு செய்து திட்டங்கள் தீட்டி செயல்பட வேண்டும்.

இவையனைத்தும் செவ்வனே நிறைவேற கல்வி முழுமை யாக மாநிலப்பட்டியலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். மாநில அரசு முழு அளவில் தாய்மொழிக் கல்விப் பரவலுக்கும் முன்னேற்றத்திற்கும் முழு மூச்சுடன் பாடுபட வேண்டும்.

## ஆட்சித் துறையில்.

அ. ஒரு மொழிக் கொள்கையின் அடிப்படையில் தமிழக அரசு அலுவலகங்கள், நிர்வாக அமைப்புகள்,

படிப்பகம்

www.padippakam.com



தனியார் நிறுவனங்கள் உள்ளிட்டு அனைத்திலும் தமிழே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். இதற்கு தமிழக அரசால் 1956-ம் ஆண்டே கொண்டு வரப்பட்ட தமிழ் ஆட்சி மொழிச் சட்டமும் அதையொட்டி கொண்டுவரப்பட்ட பல்வேறு முனைப்புத் திட்டங்களும், முறையாகவும் முழுமையாகவும் செயல்படுத்தப்பட வேண்டும்.

ஆ. தமிழ் நாட்டில் உள்ள நடுவண் அரசு அலுவலகங்கள் நிறுவனங்கள் அனைத்திலும் தமிழே அலுவல் மொழியாகப் பயன் படுத்தப்பட வேண்டும். ஏதோ தாட்சண்யத்துக்கு, அல்லது சொந்த விருப்பத்தில் இவ்விடங்கள் சிலவற்றில் சில சந்தர்ப்பங்களில் தமிழ் பயன் படுத்தப்படலாம். அது வேறு விஷயம். ஆனால் அலுவலக ஆவணங்கள் கோப்புக்களிலும், முக்கிய நடைமுறைகளிலும் சட்டப்படி இந்தி அல்லது ஆங்கிலமே இருக்க வேண்டும் என்கிற நிலை மாற்றப்பட வேண்டும்.

இப்படி தமிழக அரசு அலுவலகங்களிலும், நடுவண் அரசு அலுவலகங்களிலும் தமிழ் ஆட்சி மொழியாக ஆகும் போது தமிழ் நாட்டில் உள்ள எந்த ஒரு குடிமகளும் தன் தாய் மொழியிலேயே இவ்வலுவலகங்களில் முறையீடு செய்து கொள்ளவும் பதில் பெறவுமான உரிமையை உறுதிப் படுத்த முடியும்.

இ. இதற்கடுத்து நீதிமன்றங்கள். கீழமை நீதி மன்றங்களிலிருந்து மாவட்ட நீதிமன்றங்கள் வரை தமிழிலேயே அனைத்து அலுவல்களும் நடத்தப்படவேண்டும். அதாவது, மனுக்கள் தாக்கல் செய்ய, வழக்காட, தீர்ப்புகள் பெற அனைத்தும் தமிழிலேயே இருக்க அரசு ஆணை இருந்தும், அது முறையாக நடைமுறைப் படுத்தப்பட வில்லை. ஒரு சில நடைமுறைகளில் மட்டுமே தமிழ் பயன்படுத்தப் படுகிறது. இந்த நிலையை விரிவுபடுத்தி அனைத்து நடைமுறைகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும்; இதற்கு வழக்கறிஞர்களும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். அவர்கள் மனுக்கள், விண்ணப்பங்களைத் தமிழிலேயே தருவதுடன் தமிழிலேயே வழக்காடவும் முன்வர வேண்டும். ஆங்கிலத்திலேயே எழுதுவதும், பேசுவதும், வழக்காடுவதும், பெருமைக்குரியது. மதிப்புமிக்கது என்கிற கருத்து மாற்றப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



ஈ. இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 341 (1) உயர் நீதி மன்றங்களில் அலுவல் மொழியாக ஆங்கிலம் இருக்கும் என்று சொன்ன போதிலும், இந்நீதி மன்றங்களில் அந்தந்த மாநில மொழிகளைப் பயன்படுத்த 341 (2) வாய்ப்பளிக்கிறது. இதன்படி, தமிழக சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி ஆளுநர் மூலம் குடியரசு தலைவரின் ஒப்புதலைப் பெற்றுவிட்டால் போதும். உயர்நீதி மன்றங்களில் தமிழை அலுவல் மொழியாகப் பயன் படுத்தலாம்.

இந்த வாய்ப்பையும் பெற தமிழகத்தை ஆண்ட எந்த ஆட்சியாளர்களும் முயற்சிக்கவில்லை என்பது வேதனைக்குரியது. எனில், அப்படியே உரிமை பெற்றாலும் வழக்காடுவது மட்டும் தான் தமிழில் இருக்க முடியுமே தவிர திர்ப்புகள், தீர்ப்பாணைகள் ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டும் என்று அதே பிரிவு வலியுறுத்துகிறது. இது நீக்கப்பட வேண்டும். அதையும் தமிழிலேயே பெற வழி வகை செய்ய வேண்டும்.

இதன் வழி, ஆட்சித்துறையில் அனைத்து நிலைகளிலும் தமிழ் என்பது உறுதி செய்யப்படும்.

இதற்கு, தமிழ் தில்லியிலுல் ஒரு ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பது, சொல்லாமலே விளங்கும்.

## தொடர்புத் துறை

தொடர்பு என்பதை தமிழ்நாட்டிற்குள் மட்டுமே யான தொடர்பு, தமிழ் நாட்டிற்கு வெளியேயான தொடர்பு என இரு வேறு வகையாகப் பிரித்து ஏற்கெனவே கண்டோம்.

இதுவன்றி ஒரு குடிமகனின் பண்பாட்டுச் செயல் பாடுகள், இறைவழி பாட்டுக்கான நடவடிக்கைகள் என்கிற வகையிலும் இதை விரிவுபடுத்திப்பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு குடிமகனும் தன் தாய்மொழியிலேயே இறை வழிபாடு செய்யும் உரிமை உறுதிசெய்யப்பட வேண்டும். சமுகத்தில் இறை நம்பிக்கை குறித்து இரு வேறு கருத்துக்கள் இருக்கலாம். எனினும் இறை நம்பிக்கை உடையவர்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



அவர்களுக்கான சன நாயக உரிமைகள் மதிக்கப்பட்டு அவர்கள் தம் தாய்மொழியில் வழிபாடு நடத்த உரிய வழி வகை செய்யப்படவேண்டும் தமிழ்நாட்டில் எந்த மொழியில் அர்ச்சனை செய்யப்படவேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை தில்லியிடம் இருக்கக் கூடாது.

இதற்கடுத்து, வானொலி, தொலைக்காட்சி கலை, இலக்கிய, நாடக கலாச்சார அமைப்புக்கள் முதலான மக்கள் தொடர்பு சாதனங்கள். படைப்பாக்கத் துறைகள். இவையனைத்திலும் தமிழே முதலிடமும் முக்கியத்துவமும் பெற வேண்டும்.

மொழியில் சன நாயக உரிமை என்பது தாய்மொழியில் கருத்து தெரிவிப்பதோடு, தாய் மொழியிலேயே கருத்தறியும் உரிமையையும் சேர்த்து உள்ளடக்கியதாகும். எனில் இவை அனைத்தும் நடுவண அரசின் நிர்வாகத்திலும், கட்டுப்பாட்டிலுமே இருப்பதால், இவையனைத்திலும் இந்தி அல்லது ஆங்கிலமே, அல்லது இரண்டும் சேர்ந்தே ஆதிக்கம் செலுத்துகின்றன. குறிப்பாக தொலைக்காட்சியில் இவ்வாதிக்கம் அதிகமாக உள்ளது.

நடுவண் அரசில் உள்ளது போலவே மாநில அரசிலும், தகவல் ஒலிபரப்பு, மக்கள் தொடர்புக்கு அமைச்சகங்கள் இருந்தாலும் இவை எவ்வித அதிகாரமுமற்றதாக இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக மாநில அரசுக்கு தனியாக ஒரு வானொலி, தொலைக்காட்சி நிலையம் அமைத்துக் கொள்ளும் உரிமையில்லை. திரைப்படத்தைத் தணிக்கை செய்யும் உரிமையில்லை. தினத்தாள்கள் பருவ கால இதழ்களுக்கான பதிவளிக்கும் உரிமை இல்லை. இப்படியெல்லாம் இருப்பதனால், இவற்றுள் பல தமிழிலேயே இருந்தாலும், தமிழ் மரபை பண்பாட்டை முதன்மைப்படுத்தாமல் ஆதிக்கப் பண்பாட்டையே முதன்மைப் படுத்துகின்றன. இதனால் தமிழ் மக்களின் மொழி பண்பாட்டு உரிமை பறிக்கப் படுகின்றன.

எனவே, மொழியில் இறைவழிபாட்டு, பண்பாட்டு படைப்பாக்கத் தொடர்பு உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால்.

படிப்பகம்

www.padippakam.com



அ. மக்கள் தொடர்பு சாதனங்கள். இவற்றுக்கு உரிமம் வழங்கும் அதிகாரங்கள் உட்பட என அனைத்தும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட வேண்டும்.

ஆ. நடுவண் அரசு தனக்கென சில சாதனங்களை வைத்துக் கொள்ளலாம். இதில் அனைத்து மொழிக்கும் சம வாய்ப்பளித்து சம அளவு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும்.

இதற்கும், தமிழ் நடுவண் அரசிலும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். அதாவது இந்தியாவில் உள்ள தேசிய இன மொழிகள் அனைத்தும் தில்லியில் ஆட்சிமொழியாக ஆக்கப்பட வேண்டும் என்பது தெளிவு.

பொது.

இதுவரை பார்த்தவற்றில் இருந்து, தமிழே கல்வி மொழி, தமிழே ஆட்சி மொழி, தமிழே தொடர்புமொழி என்னும் ஒரு மொழிக் கொள்கையை நிறைவேற்ற என்ன செய்ய வேண்டு மென்பதை ஓரளவு தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இதற்கு.

அ. தமிழ் நாட்டில் உள்ள கல்வி நிலையம், அலுவலகங்கள், நீதிமன்றங்கள், தனியார் நிறுவனங்கள் உள்ளிட்டு அனைத்து நிறுவனங்களிலும் தமிழே நிலவ தமிழக அரசு உரிய முன் முயற்சிகள் எடுத்து, திட்டங்கள் வகுத்து அதைச் சீரிய முறையில் செயலாக்க வேண்டும்.

ஆ. தமிழ் நாட்டில் உள்ள பல நிறுவனங்கள் மேல் தமிழக அரசு போதிய அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. எனவே தமிழக அரசுக்கு கூடுதல் அதிகாரங்கள். நிறுவனங்கள் நடத்தும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

இ. தமிழகத்தில் உள்ள, தில்லி அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட அலுவலகங்கள் அனைத்திலும் தமிழே பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கு தில்லியில் தமிழும் ஒரு ஆட்சி மொழியாக ஆக்கப்படவேண்டும்.

இப்படிச் செய்தால் மட்டுமே, இப்படிச் செய்யும் போது மட்டுமே, ஒரு மொழிக் கொள்கை என்பது அதன் முழுமை யான பொருளில் செயல்பட முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



இதுபற்றி நடைமுறை ரீதியான வேறு சில கேள்விகள்.

ஆ. சொல்வதெல்லாம் சரிதான். நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் நம் குழந்தைகளைப் படிக்க வைக்க தரமான தமிழ்ப்பள்ளிகள் மழலையர் பள்ளிகள் இல்லையே அதனாலல்லவா ஆங்கிலப் பள்ளியில் ஆங்கில வழியில் படிக்க வைக்க வேண்டியிருக்கிறது?

நியாயம். இந்தக் குறையைப் போக்கத்தான் ஆங் காங்கே தற்போது தாய்த்தமிழ்ப் பள்ளிகள் ஏற்படுத்தப் பட்டு வருகின்றன. எனினும் இது போதாது. ஆகவே அரசே முன் முயற்சி எடுத்து இப்படிப்பட்ட பள்ளிகளை உருவாக்க வேண்டும். அவற்றை நல்ல தரத்துடனும் மதிப்புடனும் நடத்த உரிய அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதோடு உயர் கல்வியனைத்தும் தமிழில்தான் என்று நடைமுறைக்கு வந்து விட்டால் தனியாரே தரமான தமிழ்ப் பள்ளிகள் நடத்த முன் வந்து விடுவார்கள். அந்த வகையி லும் அரசு அதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஆ. உங்கள் பேச்சைக் கேட்டு எங்கள் பிள்ளைகளை தமிழ் வழியில் படிக்க வைத்தோம். இப்போது உயர் கல்வி யனைத்தும் ஆங்கிலத்திலேயே இருப்பதால் மிகவும் சிரமப் படுகிறார்கள். பேசாமல் ஆங்கில வழியிலேயே படிக்க வைத் திருந்தால் இந்திச் சிக்கல் இல்லையல்லவா?

நியாயமானதுதான். தொடக்கக் கல்வி மட்டும் தமிழிலே இருந்து உயர்கல்வி அனைத்தும் ஆங்கிலத்தில் இருந்தால் இந்தச் சிக்கல் வரும்தான்.

எடுத்துக்காட்டாக தமிழே ஆட்சி மொழி என்பதை அமலாக்கு என்று கோரும் போது அதை மேலேயிருந்து தலைமைச் செயலகத்திலிருந்து தொடங்கு என்று கோரு கிறோம்.

காரணம், கீழ்மட்ட அலுவல்கள் தமிழிலே நடந்து மேல் மட்ட அலுவல்கள் மட்டும் ஆங்கிலத்தில் இருந்தால் மேலே போக முயற்சிப்பவர்கள் இயல்பாக ஆங்கிலத்தில் தானே

படிப்பகம்

www.padippakam.com



அக்கரை செலுத்துவார்கள். எனவே, அனைத்திலும் தமிழ் என்பதை மேலிருந்தே தொடங்கு என்று கேட்டுகிறோ மல்லவா அதே போலத்தான் இதுவும்.

உயர்கல்வியனைத்தும் தமிழில் என்று வந்துவிட்டால் ஆங்கில வழியில் படிக்க முனைவது தானாக அற்றுப் போகும். தமிழ் வழியில் படிக்க வேண்டும் என்கிற அக்கரை தானாக முகிழ்த்து மேலெழுந்து வரும். ஆகவே இதையும் மேலிருந்து கீழாகவே அதாவது, உயர் கல்வியனைதும் படிப்படியாக தமிழாக்கப்படுவதன் வாயிலாகவே நிறை வேற்ற முடியும்.

இதில் ஒரு சிக்கல் என்னவென்றால், பல்கலைக் கழகக் கல்வியை பல்கலைக்கழக மானியக்குழுவும், மருத்துவக் கல்வியை அகில இந்திய மருத்துவ குழுவும், பொறியியல் கல்வியை அகில இந்திய பொறியியல் குழுவும், சட்டக் கல்வியை அகில இந்திய சட்டக்குழுவும் கட்டுப்படுத்து கின்றன. இவையனைத்தும் தில்லியின் அதிகாரம் பெற்றதாக தமிழ்க் கல்வியைத் தளைப்படுத்துகின்றன. எனவே இவ்வதி காரம் அனைத்தும் தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்கு வந்தாக வேண்டும்.

எனவே ஒரு மொழிக் கொள்கையைப் பற்றி யோசிக்கும் போது இதுபற்றியும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## மொழியும் தேசியமும்.

மொழி என்பது தன்னுடைய எண்ணங்களை வெளி யிடவும், பிறரது எண்ணங்களைப் புரிந்து கொள்ளவுமான வெறும் கருவி மட்டும் அன்று. அது சமூக இயக்கத்தின் உயிர் நாடி, வரலாற்றுப் பாரம்பர்யத்தின் செழுமை, தொடர்ச்சி. எல்லாவற்றுக்கும் மேலாக அது ஒரு தேசிய இனத்தின் அடையாளம்.

பொதுவில் மொழி இல்லாமல் தேசிய இனம் இல்லை. தேசிய இனம் இல்லாமல் மொழி இல்லை. விதிவிலக்குகள் இருப்பது வேறு. அது தனித்துவமான வரலாற்றுக் காரணங் களால் நிகழ்வது.

படிப்பகம்

www.padippakam.com



இப்படி மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளமாக, அதன் உயிர் நாடியாக இருப்பதால் ஒரு தேசிய இனத்தை ஒடுக்க வேண்டுமானால் முதலில் அத்தேசிய இனத்தின் மொழியை ஒடுக்க ஆதிக்க சக்திகள் முயன்று வருகின்றன. இதே காரணம் பற்றிய ஒரு தேசிய இனம் விடுதலை பெற வேண்டுமானால் முதலில் அத்தேசிய இனம் தன் மொழியை விடுவித்துக் கொள்ளப் போராட வேண்டியதும் அவசியமாகிறது. வரலாறும் இதையே மெய்ப்பித்து வருகிறது.

எனவே மொழிப் பிரச்சனைய மொழிக் கொள்கையை தேசிய இனப் பிரச்சனையோடே இணைத்துப் பார்க்க வேண்டுமேயல்லாது இப்பிரச்சனையை, தேசிய இனம் சாராத தனித்த ஒரு பிரச்சனையாக பார்க்க இயலாது. பார்க்கக் கூடாது.

ஒரு மொழிக் கொள்கை, தாய்மொழிக் கொள்கை, தமிழ் மொழிக் கொள்கை, தமிழ்மொழி காப்பு, என்பதெல்லாம் தமிழ்த் தேசிய எழுச்சியின் ஒரு அங்கம். எனவே, ஒரு மொழிக் கொள்கையை, தமிழ்த் தேசிய எழுச்சியின் ஒரு கூறாகவே ஒரு அங்கமாகவே நோக்க வேண்டும். அந்த அடிப்படையிலேயே இப்பிரச்சனையைப் புரிந்து கொள்ளவும் வேண்டும்.

இவ்வாறேதான் மும்மொழி, இருமொழிக் கொள்கைகளும். மும்மொழி என்பது இந்திய தேசியத்தின் கூறு. முதலாளிய, பார்ப்பனிய, இந்தி ஆதிக்கச் சக்திகளின் ஒருமையே இந்திய அரசு- அவற்றின் நலன் தாக்கும் கொள்கையே மும்மொழிக் கொள்கை.

வெள்ளை ஆட்சியின் போதே இங்கு தமிழகத்தில் துவங்கப் பெற்ற 'தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின்' வழி வந்த திராவிட தேசியத்தின் கொள்கையே இரு மொழிக் கொள்கை. வடவர் எதிர்ப்பு இந்தி எதிர்ப்பு என்பதில் பரிணாமம் பெற்று பின் பல்வேறு கூறுகளாக பிளவு பட்ட போதிலும், திராவிட பாரம்பர்யத்தில் திளைத்து வந்ததாக தம்மைக் கூறிக் கொள்ளும் இவ்வெல்லாக் கட்சிகளுமே தங்கள் மொழிக்கொள்கை இரு மொழிக் கொள்கைதான் என்று அறிவிக்கின்றன. இதன்வழி இவையனைத்துமே

படிப்பகம்

www.padippakam.com



ஆங்கில ஆதரவுப் போக்கைக் கடைப்பிடித்து இன்றும் ஆங்கிலத்திற்கே துணை போய்க் கொண்டிருக்கின்றன.

சமூக அறிவியல் நோக்கிலான அணுகு முறைகளும், வரையறைகளும், தேசம் பற்றிய புரிதல்களை நமக்குத் தெளிவு படுத்துகின்றன. இவை இந்திய தேசியமும் பொய், திராவிடத் தேசியமும் பொய், தமிழ்த் தேசியம் ஒன்றே மெய் என்பதை நமக்கு மெய்ப்பிக்கின்றன.

இவ்வாறேதான் இத்தேசியம் சார்ந்த கொள்கைகளும். 'மும்மொழிக் கொள்கை மோசடிக் கொள்கை. இருமொழிக் கொள்கை ஏமாற்றுக் கொள்கை, ஒரு மொழிக் கொள்கையே உண்மைக் கொள்கை, அதுவே நமது உரிமைக் கொள்கை என்பது' வெறும் முழக்கம் மட்டுமே அல்ல. அது ஒரு கோட்பாடு, தமிழ்த் தேசிய விடுதலையின் வேட்கைக்கான எழுச்சிக்குரல்.

எனவே, இந்திய தேசியத்திற்குத் துணை போய், திராவிட தேசியத்திற்கு வக்காலத்து வாங்கி ஒரு மொழிக் கொள்கையைப் பேச முடியாது. தமிழ்மொழி நலனைப் பேண முடியாது. அதே போல் இந்தித் திணிப்பை நியாயப் படுத்தி, ஆங்கில அதிக்கத்திற்குத் துணை போய் தமிழ்த் தேசியம் பேச முடியாது, தமிழக நலனைப் பாதுகாக்க முடியாது.

முதலாளியம், பார்ப்பனியம், இந்தி ஆதிக்கம் ஆகிய இம்மூவகைச் சக்திகளின் முக்கூட்டுக் கொள்கையே 'இந்திய தேசியம்' அதன் நலன் காக்கும் மொழிக் கொள்கையே மும்மொழிக் கொள்கை.

வடவர் எதிர்ப்பு, பார்ப்பனர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, நெருக்கடிக்குள்ளாகும் போதெல்லாம் இவற்றோடு சமரசம். நாற்காலி மோகம். பதவிப்பித்து, இதுவே திராவிடத் தேசியம். இதன் மொழிக் கொள்கையே இருமொழிக் கொள்கை.

இவ்விரண்டு கொள்கைகளுக்கும் முற்றிலும் மாற்றாக முதலாளிய எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, இந்தி ஆதிக்க எதிர்ப்பு ஆகியவற்றை முன்வைத்து, இவற்றோடு எந்த

படிப்பகம்

www.padippakam.com



சந்தர்ப்பத்திலும் சமரசத்துக்கு இடமில்லாமல் போராடி, தமிழகத்தின் உரிமைகளை மீட்டு, தமிழகத்தின் இறை யாண்மையை உறுதிப்படுத்தி தமிழக நலன்களைப் பாது காக்க முனைவதே தமிழ்த் தேசியம். இத்தமிழ்த் தேசியத் தின் கொள்கையே ஒரு மொழிக் கொள்கை. அது தான் தாய்த் தமிழ்க் கொள்கை.

யாராவது, வெறும் தமிழ்ப்பற்று காரணமாக, தமிழ் மொழியின் பெருமை காரணமாக, அதன் மேல் கொண்டுள்ள ஈடுபாடு காரணமாக அதன் உரிமைகளுக்கு; குரல் கொடுத்து அது சார்ந்த கோரிக்கைகளுக்கு ஆதரவு தருவதாக சொல்லிக் கொண்டிருந்தால் அவர்கள் அன்பு கூர்ந்து நம் தாய்மொழிச் சிக்கல் குறித்து இந்த அடிப்படை யில் சிந்திக்க வேண்டும். இந்த அடிப்படையிலேயே மொழிக்கும் தேசியத்துக்குமான உறவையும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அடிப்படையிலேயே இதைத் தீர்க்கவும் முன்வரவேண்டும்.

## கோட்பாடும் நடைமுறையும்

இப்படியெல்லாம் சொல்வதனால் தமிழ்த்தேசிய இனத்திற்கு விடுதலை கிடைத்தால்தான் ஒரு மொழிக் கொள்கை சாத்தியம் என்றோ, அல்லது ஒரு மொழிக் கொள்கை என்பது தமிழ்த் தேசிய விடுதலை ஒன்றால் மட்டுமேதான் சாத்தியம் என்றோ தவறான, யந்திர கதியான முடிவுகளுக்கு யாரும் சென்றுவிடக் கூடாது.

மொழிக்கும், தேசியத்திற்குமுள்ள உறவை நாம் இப்படி பிணைத்துச் சொல்வதன் நோக்கம், இப்பிரச்சனை எதுவும் தனித்தனியானது அல்ல என்பதையும், இவ்விரண்டிற்குமான உறவு எத்தன்மையது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான்.

ஏனெனில், ஒரு சனநாயக் கோரிக்கை என்கிற அளவில் ஒரு மொழிக் கொள்கையின் பல்வேறு கூறுகளை நாம் இப்போதே பெற முடியும். தொடர்ச்சியான போராட்டங் களின் மூலம் இதை சாதிக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



எடுத்துக்காட்டாக, ஒரு மொழிக் கொள்கையின் அடிப்படையில் தமிழே கல்வி மொழி, தமிழே ஆட்சி மொழி, தமிழே தொடர்பு மொழி என்று நாம் கூறும்போது இது செயலாக்கப்பட வேண்டுமானால் தமிழ் நடுவண் அரசிலும் ஒரு ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்றும் கோருகிறோம்.

அதாவது இந்தியா போன்ற பல்மொழி பேசும் பல்தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாட்டில். ஒரு மொழியை மட்டுமே ஆட்சி மொழியாக்கியிருப்பது பிறமொழிகளின் உரிமைகளையும், சமத்துவத்தையும் மறுப்பதாகும். எனவே இந்திய ஆட்சிப் பரப்பில் உள்ள அனைத்து தேசிய இனங்களின் மொழிகளையும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்கிற நியாயமான சனநாயகப்பூர்வ கோரிக்கை எழுகிறது. பொதுவான இச்சனநாயகக் கோரிக்கையின் அடிப்படையில் நின்று நோக்க தமிழும் தில்லியில் ஒரு ஆட்சி மொழியாக வேண்டும் என்கிற கோரிக்கையின் நியாயம் தெளிவுபடுத்தப்படுகிறது.

அடுத்து, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 344 (1) மற்றும் 351 பிரிவுக்கான எட்டாவது இணைப்புப் பட்டியலில் உள்ள மொழிகள் அனைத்தையும் தில்லியில் ஆட்சி மொழியாக்கு என்கிற கோரிக்கையும் நீண்ட காலமாகவே முன் வைக்கப்பட்டு அது உதாசினம் செய்யப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் வந்திருகிறது.

இக்கோரிக்கைகளெல்லாம் நிறைவேற்றிப்பட்டால், இந்தியாவில் உள்ள தேசிய இனமொழிகள் பல நடுவண் அரசிலும் ஆட்சிமொழியாக்கப்பட்டு, மொழிச்சிக்கல் பெருமளவு தீர்க்கப்பட வாய்ப்புள்ளது.

எனவே, தமிழ்ச் தேசிய விடுதலை கிடைத்தால்தான் என்று அல்லாமல் ஒரு சனநாயக் கோரிக்கை என்கிற அடிப்படையிலும் இப்பிரச்சனை பெருமளவு தீர்க்கப்பட வாய்ப்புண்டு என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அதே போல மொழிக்கான போராட்டந்திற்கு முன் வருபவர்களெல்லாம், அவர்கள் தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்பதையும் முன் நிபந்தனை

www.padippakam.com



ஆக்க முடியாது. காரணம் இயல்பாக ஒரு சனநாயகக் கோரிக்கை என்கிற அளவிலோ மொழி மேல் உள்ள பற்று காரணமாகவோ அவர்கள் இப்படிப்பட்ட போராட்டங் களுக்கு வரலாம். தங்களை அர்ப்பணித்துக் கொள்ளலாம்.

எனினும் இவற்றையெல்லாம் நாம் இங்கே விளக்கிச் சொல்வதன் நோக்கம் இப்பிரச்சனை குறித்து நமக்கு கோட்பாட்டு ரீதியில் ஒரு புரிதல் தெளிவு இருக்க வேண்டு மென்பதற்காகத்தான். அது சரியாக நோக்கப்படாமல் மீண்டும் மீண்டும் சறுக்கல்களுக்கும் பின்னடைவுகளுக்கும் ஆட்பட்டு விடக்கூடாமி என்பதற்காகத்தான்.

எல்லாம் சரிதான் ஆனால் நடைமுறையில் இதெல்லாம் சாத்தியப்படுமா. இத்தனை மொழிகளையும் ஆட்சி மொழி களாக ஆக்கி வைத்துக் கொண்டு சமாளிக்க முடியுமா, நிர்வாகம் செய்ய முடியுமா என்று சிலர் கேட்கலாம்.

எல்லாவற்றுக்கும் பதில், எந்த ஒரு பிரச்சனையையும் அது சாத்தியப்படுமா, படாதா என்கிற நோக்கில் பார்க் காமல், அது சனநாயக் கோட்பாட்டிற்கு உட்பட்டதுதானா அல்லவா என்கிற நோக்கில் பார்த்து அது சனநாயக கோட் பாட்டிற்கு உட்பட்டதுதான் என்றால் அதை எப்படி நடை முறைப் படுத்துவது என்றுதான் சிந்திக்க வேண்டுமே தவிர எதிர்விதமாகச் சிந்திக்கக் கூடாது. இதே அளவுகோல்தான் மொழிச் சிக்கலுக்கும். எனவே மொழி சார்ந்த எந்த ஒரு பிரச்சனையையும் அம்மொழியின் சனநாயக உரிமை, மொழிகளின் சமத்துவம், தாய்மொழியுரிமை என்கிற சனநாயக கோட்பாட்டில் நின்றே நோக்க வேண்டும்.

உலக நாடுகள் பலவற்றுள் இந்நோக்கு நடைமுறைப் படுத்தப்பட்டு, மொழியுரிமை பாதுகாப்படுகிறது. மொழி சமத்துவம் பாதுகாக்கப்பட்டு இன்றும் நடப்பில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டை விட மிகச் சின்னஞ்சிறிய நாடு களிலெல்லாம் கூட அங்குள்ள தேசிய இனங்களின் அனைத்து மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆக்கப் பட்டுள்ளன.

சுமார் ஒரு கோடி மக்கள் தொகையே கொண்ட பெல்ஜியத்தில் டச்சு, பிரஞ்சு ஜெர்மன் ஆகிய மூன்று

படிப்பகம்

www.padippakam.com



மொழிகள் ஆட்சி மொழிகளாக உள்ளன. 75 லட்சம் மக்கள் தொகை கொண்ட ஸ்விட்சர்லாந்தில் ஜெர்மன், பிரஞ்சு. இத்தாலி, ரோமான்ஷ் ஆகிய நான்கு மொழிகள் ஆட்சி மொழிகளாக உள்ளன, 3.5 லட்சம் மக்கள் தொகை கொண்ட சிங்கப்பூரில் 6 விடுக்காடே அதாவது 2.2 லட்சம் மக்களே தமிழர்கள் இருந்தும் அங்கு சீனம், மலாய், ஆங்கிலம் ஆகியவற்றுடன் தமிழும் ஆட்சி மொழி நிலையில் வைக்கப்பட்டுள்ளது. உலக அளவில் இப்படி பல எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம். அந்த அளவுக்கு அங்கெல்லாம் மொழிக்கான உரிமை, சமத்துவம் சனநாயகம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல நாடுகளில் அங்குள்ள தேசிய இனங்களின் மொழியுரிமை பாதிக்கப்படாத வகையிலும் மொழி சமத்துவம் பாதுகாக்கப்படும் வகையிலும், அவர்களது அனைத்து மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட்டுள்ளன. அங்கெல்லாம் அவரவர் தாய்மொழியில் கல்வி, நிர்வாகம், பிற தொடர்புகள் பண்பாட்டு நடவடிக்கைகள் நடை பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

எனவே, முடியுமா. நடைமுறை சாத்தியப்படுமா என்றெல்லாம் வினா எழுப்பிக் கொண்டிருக்காமல் நாம் இந்தத் திசையில் சிந்திக்க வேண்டும். மொழியுரிமையும், மொழி சமத்துவமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே முக்கியம் என்கிற அடிப்படை நோக்கில் இதற்குத் தீர்வு காண முற்படவேண்டும். அப்படி தீர்வு காண முற்படும் போது அதற்குரிய தீர்வு தானே கிடைக்கும் என்பதே வரலாறும்.

எல்லாம் சரிதான். தமிழ்நாட்டில் தமிழே தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு இது சரி. தமிழ்நாட்டிலேயே வேற்று மொழியைப் பேச்சுமொழியாகக் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்களே. அவர்களுக்கு என்கிற ஒரு கேள்வி எழலாம்.

நியாயம் தமிழ்நாட்டிலேயுள்ள வேற்று மொழி பேசுகிறவர்களை, வேற்றுமொழியாளர்களை இரண்டு வகையாகப் பார்ப்போம்.

முதலாவது, இவர்கள் தமிழ்நாட்டில் குடியேறி பல தலைமுறைகள் ஆகிப் போனதால் தமிழர்களோடும் தமிழ்த்

படிப்பகம்

www.padippakam.com



தேசியத்தோடும் சங்கமித்து, வீட்டில் மட்டுமே தம் மொழியைப் பேசி, அதைக் குடும்பப் பேச்சு மொழியாக மட்டுமே கொண்டு, பிற சமூக வாழ்க்கையனைத்திற்கும் அதாவது பிற கல்வி, வேலை வாய்ப்பு. பிற பண்பாட்டு நடவடிக்கைகள் அனைத்திற்கும் தமிழையே பயன்படுத்து பவர்கள்.

இவர்களில் பெரும்பாலும் இங்கு வந்து குடியேறிய முதல் தலைமுறை தங்கள் தாய்மொழியை எழுதப் படிக்கத் தெரிந்திருந்து அடுத்த தலைமுறை எழுத மறந்து படிக்க மட்டுமே கற்று, அதற்கடுத்த தலைமுறை படிக்கவும் மறந்து பேச மட்டுமே அறிந்து, அடுத்தடுத்த தலைமுறை கள், பேச்சையும் பெருமளவு மறந்து தமிழ்ச் சமூகத்தோடு முழுக்கவும் சங்கமமாகிப் போனவர்கள்.

இந்நிலையில் தற்போது இவர்களது தாய்மொழியே தமிழ் மொழியாகிவிடுகிறது. இவர்கள் குடும்பத்திற்குள், உறவினர்களுக்குள் வேற்று மொழியைப் பேசினாலும் அது வெறும் பேச்சுமட்டத்தி லேயேதான் இருக்குமே யல்லாது அவர்களுக்குள் கடிதத் தொடர்புகள் வேறு கணக்கு வழக்குகள் அனைத்தும் தமிழிலேயே இருந்து வருகிறது.

எனவே இவர்கள் பற்றி பிரச்சனை இல்லை. பிரச்சனை இன்னொரு பிரிவினர் பற்றியே.

இவர்கள் பிற தேசிய இன வாழிடங்களின் எல்லை யோரப் பகுதிகளில், தொடர்ச்சியான நிலப்பரப்பில் ஒரு கணிசமான எண்ணிக்கையில் வாழ்பவர்கள். இவர்கள் தங்கள் தாய் மொழியையே தங்கள் சமூக வாழ்க்கைக்கான மொழியாகவும் கொண்டிருப்பவர்கள். இவர்கள் மொழிச் சிறுபான்மையினர் என்று அழைக்கப்படுவர்.

அந்த வகையில், இங்கு தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு என்னென்ன உரிமைகள் உண்டோ, அத்தனை உரிமைகளும் அதாவது தாய்மொழி சனநாயக உரிமைகள் அவர்களுக்கும் உண்டு. என்ற போதிலும் அவர் கள் தமிழ்த் தேசத்தில் வந்து வாழ்பவர்கள் என்பதால் அவர் கள் தமிழை ஒரு மொழிப் பாடமாக, கட்டாய பாடமாகப்

படிப்பகம்

www.padippakam.com



படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். காரணம் அவர்களுக்கு தங்கள் தாய்மொழி வேறாகவும், வதியும் தேசிய இன வாழ்வெல்லை வேறாகவும் இருக்கிறது. அதனால் இந்த நிபந்தனை அவர்களுக்கு முன் வைக்கப்படுகிறது.

இது ஏதோ தமிழ் நாட்டில் வந்து வதியும்பிறமொழிச் சிறுபான்மையினருக்கு மட்டுமேயான நிபந்தனை அல்ல. தமிழர்கள் வேறு தேசிய இன வாழ்வெல்லைக்குள் எங்காவது போய் மொழிச் சிறுபான்மையினராக வாழ்ந்தாலும் அவர்களுக்கும் இதே நிபந்தனைதான். அவர்களும் தாங்கள் வதியும் அந்தந்த தேசிய இனத்தின் மொழியைக் கற்றே ஆகவேண்டும்.

இந்த வகையிலேயே இந்தப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். இதுதான் எம்மொழிக்குமான மொழிசார் சனநாயக உரிமையும், எம்மொழிக்கும் வழங்கப்படுகிற மொழி சமத்துவமும்.

## போராட்டங்களும் படிப்பினைகளும்

முடிவாக ஒரு கருத்து.

இந்திய சுதந்திரத்திற்கு முன்பே 1937 ம் ஆண்டு அப்போதைய சென்னை மாகாணத்தில் இராசாசியை முதல்வராகக் கொண்ட பேராயக்கட்சியின் ஆட்சி 6,7,8வகுப்புக்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்கியதைத் தொடர்ந்து முதல் மொழிப் போராட்டம் வெடித்தது. இந்தித் திணிப்பை எதிர்த்த இப்போராட்டம் இயல்பாகவே அப்போது நடப்பிலிருந்த ஆங்கில ஆதிக்கத்திற்குத் துணை போவதாய் அமைந்தது.

அதன்பின் இந்திய சுதந்திரத்திற்கு 18 ஆண்டுகள் கழித்து 1965ல் வெடித்த போராட்டம். 1950ல் சுதந்திர இந்தியாவின் அரசமைப்பை உருவாக்கி 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக நீடிக்க வகை செய்தவர்கள் அக்கால கெடுவுக்குள் ஆங்கிலத்தை அகற்றி இந்தியை நடைமுறைக்குக் கொண்டுவர 1963லேயே சட்டம் இயற்றினார்கள். இந்த 63ம் ஆண்டு மொழிச்சட்டத்தைத் தொடர்ந்து வெடித்ததுதான். 1965-ல் நடை பெற்ற இரண்டாம் கட்ட மொழிப் போராட்டம்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தப் போராட்டமும் இந்தியை எதிர்த்து நடப்பிலிருந்த ஆங்கிலத்தையே தொடர்ந்து நீடிக்க வகை செய்தது அதோடு 37ல் இந்தியைத் திணிக்க துணைபோன இராசாசி, இந்த கட்டத்தில் இந்தியை எதிர்தது ஆங்கிலத்துக்கு ஆதரவாக நின்று புது முழக்கத்தையே உருவாக்கி 'எப்போதும் ஆங்கிலம் இந்தி ஒரு போதுமில்லை' என்றார்.

ஆக இந்தப் போராட்டமும் இந்தியை எதிர்த்து நடப்பில் இருந்த ஆங்கிலத்தையே தொடர்ந்து நீட்டிக்க வகை செய்ததே தவிர ஆங்கிலத்தை அகற்றி அந்த இடத்தில் தமிழை வைக்க முனைப்புக் கொண்டதாக இல்லை. அப்படிப்பட்ட கோரிக்கைகளோ கோட்பாடோ எதுவும் முன் வைக்கப்படவுமில்லை.

இந்திய அரசமைப்பின் மொழிக் கொள்கை இந்தித் திணிப்புக் கொள்கையே என்பது வெளிப்படை. அதில் ஆங்கிலத்தின் இடமும், இந்தியைத் திணித்து முடிக்கும் வரைக்குமான ஒரு இடைக்கால ஏற்பாடே, முழுமையாக இந்தி மயமாக ஆக்குவதற்கான ஒரு தாற்காலிக உத்தியே தவிர வேறல்ல. எனவே இதில் தாய்மொழிக்கு தமிழ் மொழிக்கு எந்த இடமும் இல்லை. என்பது தெளிவு.

எனில் இது புரியாமலோ அல்லது புரிந்தும் பசப்பியோ சிலர் நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக்கு என்று கோரி வருகிறார்கள்.

நேருவின் உறுதிமொழி என்பது 1963 ஆட்சி மொழிச் சட்ட விவாதத்தின் போது தில்லி நாடாளுமன்றத்தில் 1964 ஏப்ரல் 24ம் நாளன்று அவர் ஆற்றிய உரையும் அதற்கு முன்னும் பின்னும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் கொடுத்த வாக்குறுதியுமே.

இதன் சாரமாவது: 'இந்தி பேசாத மக்கள் தாங்களாக விரும்பி ஏற்றுக் கொள்ளும் வரை ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும்' என்பதுதான்.

அதாவது இந்த வாக்குறுதியின் இலக்கு இந்திதான். அதுவரை இடைக்கால ஏற்பாடாக நீடிப்பதே ஆங்கிலம். அவ்வளவே, இதில் தாய்மொழிக்கோ தமிழ் மொழிக்கோ எந்த இடமும் இல்லை. இருக்கிறது என்றால் யாராவது சொல்லட்டும்.



படிப்பகம்

www.padippakam.com



ஆனால் இதைத்தான் சட்டமாக்கு என்று கோரி, இதைச் சட்டமாக்கினாலே தமிழ்த் தழைத்து விடும் என்பது போல சிலர் தகிடு தத்தம் செய்து வருகிறார்கள்.

எனவே இந்தப் போராட்ட அனுபவங்களிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டும். இந்தித் திணிப்பு என்பது எல்லோருக்கும் தெரிந்த நேரடியான எதிரி. எனில் ஆங்கில ஆதிக்கம், மோகம் என்பது நேரடியாக வெளியே தெரியாமல் உடனிருந்தே சொல்லும் வியாதி. நோய். இந்த நோயிலிருந்து நாம் விடுபடவேண்டும். ஏனெனில் தமிழ் வளர்ச்சிக்கு இன்று முதல் தடையாயிருப்பது ஆங்கிலமே அன்றி, இந்தி அல்ல.

எனில், இன்றுவரை தமிழ்நாட்டில் ஆங்கில ஆதிக்கத்தை, மோகத்தை எதிர்த்த விழிப்புணர்ச்சி இயக்கம் இல்லை. வீறு கொண்ட போராட்டங்கள் இல்லை. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த எழுச்சிமிக்க மாநாடுகள், ஊர்வலங்கள் பொதுக் கூட்டங்கள் இல்லை. அறிவார்த்த கருத்தரங்குகள் இல்லை. முறையான விழிப்புணர்ச்சி இயக்கங்கள் இல்லை.

இக்குறைபாட்டை தமிழ் மொழி உணர்வாளர்கள், தமிழ் மொழிப் பற்றாளர்கள், தமிழின, தமிழ்த்தேசியச் சிந்தனையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இது குறித்து சிந்திக்க வேண்டும்.

## புதிய எழுச்சி.

இக்குறைபாட்டைப் போக்கும் வகையில் தற்போது தமிழகத்தில் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் 25-4-99 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 100 தமிழ் உணர்வாளர்கள் 'தமிழில் கல்வி கொடு' 'தமிழில் படித்தோர்க்கு வேலை கொடு' என்கிற கோரிக்கைகளை முன்னிறுத்தி சாகும்வரை பட்டினிப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

அடுத்த நாளே தமிழக அரசு தலையிட்டு இது தொடர்பான சில வாக்குறுதிகள் தந்ததன் அடிப்படையில் இப் பட்டினிப் போராட்டம் தாற்காலிகமாக நிறுத்திக் கொள்ளப் பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்கும் திசை வழியில் இந்த போராட்டம் ஒருபடி சிறப்பான முன்னேற்றம் தான் என்ற போதிலும், இது தொடர்பாக சில கருத்துக்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியதும் மிகவும் முக்கியம்.

5ம் வகுப்பு வரை, தமிழில் மட்டுமே கல்விகொடு, அனைத்து உயர் கல்வியையும் தமிழிலேயே கொடு, தமிழ் வழியில் படித்தோர்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடு என்கிற இம்மூன்று அம்சக் கோரிக்கைகளை வலி யுறுத்தி இப்போராட்டம் அறிவிக்கப்பட்ட நாள் 1-11-98 அதாவது சான்றோர் பேரவை அமைப்பு சார்பில் சென்னை செருமன் அரங்கில் நடைபெற்ற தமிழகப் பெருவிழாவில் இது அறிவிக்கப்பட்டது.

இது அறிவிக்கப்பட்டு 5 மாதம் ஆன நிலையிலும் தமிழக அரசு இது குறித்து அக்கரைப்பட்டுக் கொள்ளவில்லை. என்பது கவனிக்கத்தக்கது.

இடையில் இந்த 100 தமிழ் உணர்வாளர்களது பட்டினிப் போராட்டத்தை ஆதரித்து 23-3-99 அன்று தமிழகமெங்கும் 78 இடங்களில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட ஒரு நாள் அடையாளப் பட்டினிப் போராட்டம் நடை பெற்றது.

அடுத்து 10-4-99 அன்று தமிழகமெங்கும் இப்போராட் டத்தை ஆதரித்து வட்ட, மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் பட்டி தொட்டிகளெங்கும் மிதிவண்டிப் பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

இந்த இயக்கங்கள் நடைபெற்ற போதும் அரசு இது பற்றி ஒன்றும் கண்டு கொள்ளவில்லை.

இதற்கடுத்து 13-4-99 அன்று கன்னியாகுமரியிலே யிருந்து உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் சார்பில் 60க்கும் மேற்பட்டோர் சென்னை நோக்கி மிதிவண்டிப் பிரச்சாரப் பயணம் மேற்கொண்டு வழிநெடுக இப்போராட் டத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்து வந்தனர். இதுதவிர சான்றோர் பேரவை சார்பில் தமிழகத்தின் கிழக்கே வேதாரண்யத்திலிருந்தும், மேற்கே போடி நாயக்கனூரிலிருந் தும் தெற்கே குற்றாலத்திலிருந்தும் 17-4-99 அன்று ஒரே

படிப்பகம்

www.padippakam.com



நாளில் மூன்று அணிகளும் தனித் தனியாக பிரச்சாரப் பயணம் மேற் கொண்டு தமிழகமெங்கும் பிரச்சாரம் செய்து சென்னை நோக்கி வந்தது.

இதற்கடுத்து 25-4-99 அன்று சென்னை சைதை மறை மலை அடிகள் பாலத்திலிருந்து வள்ளுவர் கோட்டம் நோக்கி மாபெரும் எழுச்சிப் பேரணி நடத்தியே 100 தமிழ் உணர் வாளர்களும் பட்டினிப் போராட்டத்தில் அமர வைக்கப் பட்டனர்.

இடையில் இவ்வளவு சம்பவங்களும் நடைபெற்றும், இது எது குறித்தும் அரசு செவிசாய்க்கவில்லை. தன் நிலை யைச் சொல்லவில்லை. ஒருவேளை தமிழுக்கு ஆதரவான இப்பிரச்சாரம் நடப்பது நல்லதுதான் என்று இதற்கு உறு துணையாக மௌனம் சாதித்தது போலும்.

எல்லாவற்றுக்கும் பிறகு 100 தமிழ் உணர்வாளர்கள் பட்டினிப் போராட்டம் தொடங்கிய அன்று இரவும் மறுநாள் காலையுமே விரைவான முயற்சிகள் மேற்கொண்டு சில வாக்குறுதிகளும் தந்து போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது.

எது எப்படியான போதிலும் அரசின் நோக்கம், கோரிக்கைகளின் பால் அக்கறை கொண்டு அதை நிறை வேற்றுவதை விடவும், போராட்டத்தை விரைந்து ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விடவேண்டும் என்பதிலேயே முனைப்பாய் இருந்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள லாம்.

தற்போது அரசு தந்துள்ள வாக்குறுதிகள் பிரச்சினை குறித்து ஆராய குழு நியமிப்பதாகவும், அக்குழுவில் தமிழ் அறிஞர்களும் பலர் இடம் பெறுவர் என்றும் சொல்லி யுள்ளது. என்றாலும் பிரச்சனை இத்துடன் முடியப் போவதில்லை.

நமக்கு ஏற்கனவே பல்வேறு போராட்ட அனுபவங்கள் இருக்கின்றன.

கோரிக்கைகளை வைக்க ஒரு போராட்டம் கோரிக்கை களை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டால் அது

படிப்பகம்

www.padippakam.com



தொடர்பான ஆணைகளைப் பிறப்பிக்க ஒரு போராட்டம் ஆணைகள் பிறப்பித்தால் அதை அமலாக்கம் செய்யக்கோரி அடுத்த கட்ட போராட்டம் என்று ஒவ்வொரு அசைவுக்கும் ஒரு போராட்டம் நடத்த வேண்டிய நிலை.

அதே நிலை இதற்கும் ஏற்படாது என்பதற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லை.

காரணம் அரசு இயல்பாகவே ஆங்கில ஆதிக்கத்திற்குத் துணை போகிறது என்பது ஒருபுறம். அடுத்து பார்ப்பனிய, மேலாதிக்க, மேல் தட்டுக் கூடாரம், அதன் பிடியிலுள்ள மக்கள் தொடர்பு சாதனங்கள் தமிழுக்கு எதிராக இருக்கின்றன என்பது மறுபுறம்.

எனவே தமிழுக்கு ஆதரவாக அரசே ஏதாவது ஆணைகள் பிறப்பித்தாலும், அதை எதிர்க்கவும், ஆங்கிலத்திற்கு ஆதரவாக இயக்கங்கள் நடத்தவோ, மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் ஆங்கில ஆதரவுக் கருத்துருவாக்கத்தை முடுக்கி விடவோ ஆதிக்க சக்திகள் முனையலாம்.

ஆகவே தமிழ் உணர்வாளர்கள் இது குறித்து எச்சரிக்கையோடும் விழிப்போடு இருக்க வேண்டும். தமிழுக்கு ஆதரவான மக்கள் இயக்கங்களைத் தொடர்ந்து வலுப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்து முனைப்போடு செயலாற்ற வேண்டும்.

இந்தப் போராட்டத்தைப் பொறுத்தவரை, இது உதிரியாய்க் கிடந்த தமிழ் உணர்வாளர்களை அறிஞர்களை கட்சி பாகுபாடின்றி ஒருங்கிணைத்திருக்கிறது. தமிழுக்காக ஓரணியில் நிற்க முன்னோடிகளை இதன் ஆதரவாளர்களை ஒன்று திரட்டியிருக்கிறது. தமிழுக்காக போராடவும், அர்ப்பணிக்கவும், பலர் முன்வரக் காத்திருக்கிறார்கள் என்னும் நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது.

அரசு அலங்கார வார்த்தைகளால் தமிழர் உணர்வாளர்களைக் குளுப்பாட்டி மதிமயங்கச் செய்து மாய்மாலம் பண்ணலாம் என்கிற நப்பாசையில் மண்ணைப் போட்டிருக்கிறது.

இதெல்லாம் இப்போராட்டத்தில் சாதகமான அம்சங்கள்

படிப்பகம்

www.padippakam.com



என்றாலும் இத்திசையில் இது ஒரு துவக்கம் மட்டுமே. இது செல்ல வேண்டிய பயணம் இன்னும் நெடுந்தூரம் இருக்கிறது.

எனவே, இதுவே மாபெரும் வெற்றி என்று கருதி களிப்பில் ஈடுபட்டு நமக்கு இருக்க வேண்டிய எச்சரிக்கை யுணர்வை நாம் இழந்துவிடக்கூடாது.

இந்தப் போராட்டம் தனித்தனியாகக் கிடந்த யந்திரங் களைத் தொகுத்து இணைத்துப் பூட்டி வண்டியைத் தண்ட வாளத்தில் ஏற்றி நிறுத்தியுள்ளது. அடுத்து இதை இயங்க வைத்து முன் கொண்டுச் செல்லச் செய்வதே நம்முன் உள்ள பணியாகும்.

காரணம், எதிரிகள் தொடர்வண்டியை தண்டவாளத்தி லிருந்து கீழே இறக்கலாம, அல்லது தண்டவாளத்தில் ஏதும் தடைகள் ஏற்படுத்தி வண்டியை மேலே செல்ல வொட்டா மல் தடுக்கலாம். அல்லது வெடி வைத்து தகர்க்கவோ கவிழ்க்கவோ முனையலாம். எதை வேண்டுமானாலும் செய்ய முற்படலாம்.

எனில், எதிரிகள் எது செய்ய முனைந்தாலும், எல்லா வற்றையும் முறியடித்து வெற்றிகண்டு நம் தாய்த் தமிழின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்குமான பயணத்தைத் தொடர வேண்டியது நம் பொறுப்பு. வரலாற்றுக் கடமை.

எனவே மீண்டும், தற்போது ஏற்பட்டுள்ள எழுச்சி கவனமான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். அது பின்னடைவுகளுக்கு ஆளாகமலோ, தடம்புரளாமலோ, உரிய திக்கில், உரிய இலக்கில் முன்னேற வேண்டுமென்பதே அனைவரது அவாவும்.

இதற்கு தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் விழிப் போடிருந்து செயலாற்ற வேண்டும். தாய்த் தமிழுக்கான போராட்டத்தில் தொடர்ந்து தங்களை ஈடுபடுத்திக் கொண்டு தியாகங்கள் புரியவும், அர்ப்பணிக்கவும் முன் வரவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

## விளக்கக் குறிப்புக்கள்.

* * *

**1. இந்துத்துவ சாயலோடு கூடிய இந்தி.**

பாரசீக, அராபிய, துருக்கி மன்னர்களது படையெடுப்பின் வழி, இம்மொழிகள் அப்போது இந்தியாவில் நிலவிய பாலி முதலான மொழிகளுடன் கலந்து, ஒரு கலவையான மொழி உருது மொழி என்பது உருப்பெற்றது. உருது மொழி என்பதற்கு துருக்கிய மொழியில் இராணுவக் கடைத்தெரு மொழி எனப் பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது பன்னாட்டு ராணுவத்தினரும் கலந்து புழங்கும் கடைத் தெருவில் உருவான ஒரு கலவை மொழி என்பது இதன்பொருள்.

இந்த உருது மொழி சமஸ்கிருதத்தோடு கலந்து இவ்விரண்டின் சங்கமிப்பில் உருவானதே இந்துஸ்தானி மொழி. இந்த இந்துஸ்தானியிலிருந்து படிப்படியாக வளர்ச்சியுற்றதே இந்தி மொழி.

அதாவது இந்துஸ்தானி மொழியிலுள்ள உருதுச் சொற்களைப் படிப்படியாக நீக்கி அந்த இடத்தில் சமஸ்கிருதச் சொற்களை வைத்து சமஸ்கிருத மயமாக்கப்பட்ட இந்துஸ்தானியே இந்தி எனப்படுகிறது.

இந்துஸ்தானியை தேவநாகரி லிபியாலும் எழுதலாம். உருது லிபியிலும் எழுதலாம். இதில் இந்து மதத்தோடு நேரடித் தொடர்பில் உள்ள சமஸ்கிருத - தேவநாகரியில் எழுதப்படுவதுதான் இந்தி.

இந்தியை தேவநாகரி லிபியில்தான் எழுத வேண்டும் என்று அல்லது தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட இந்திதான் அதிகார பூர்வமானது என்று இந்திய அரசமைப்புச் சட்டம் திட்டவட்டமாகச் சொல்கிறது. இதிலிருந்தே இந்திமொழியின், இந்திய அரசமைப்பின் இந்துத்துவ சாயலையும் அதன் ஆதிக்கத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

**2. துறைசார் மொழி.**

எந்த ஒரு மொழியிலும் அதன் எல்லாத் துறை அறிவையும் அது சார்ந்த எல்லா கலைச் சொற்களையும் எவரும் அறிந்திருப்பதாகச் சொல்ல முடியாது. எடுத்துக்காட்டாக ஆங்கில இலக்கியம் படித்த ஒருவருக்கு ஆங்கில இயற்பியல் வேதியியல் கலைச் சொற்கள் தெரியாது. இயற்பியல் வேதியியல், படித்த ஒருவருக்கு வரலாற்றுக் கலைச் சொற்கள் தெரியாது. இதேபோலத்தான் ஒவ்வொரு மொழியிலும். எனவே தன் தாய்மொழியில் கிடைக்கும் அறிவுக் களஞ்சியத்தைப் பெற்ற ஒருவர், வேற்று மொழியில் உள்ள

படிப்பகம்

www.padippakam.com


அறிவைப் பெறவிரும்பினால், அவர் எத்துறை சார்ந்து அம் மொழியறிவைப் பெற விரும்புகிறாரோ. அத்துறை தொடர்பான பிற மொழியறிவை மட்டும் பெற்றால்போதும்! இதைத்தான் ஆறு மாதத்தில் பெற முடியும் என்கின்றனர். இன்னும் எளிமையாகச் சொல்வதானால் சுற்றுலாத் தலத்தில் உள்ள வழிகாட்டிகள் எல்லா மொழியிலும் பேசுவது போல இருக்கும். இதனால் அவர்கள் எல்லா மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள் என்பது அல்ல. எல்லா மொழியிலும் உள்ள வழிகாட்டுதல் தொடர்பான சொற்கள் அவர்களுக்குத் தெரியும். அவ்வளவே, இவ்வாறே பல்மொழி பேசும் வியாபாரிகள், தங்கும் விடுதிப் பணியாளர்கள் இன்ன பிறரும், அவரவர்களுக்கும் அவரவர் தொழில் சார்ந்த கலைச்சொற்கள் தெரியும். எனவே பிறமொழி கற்றல் என்பது அதன் அனைத்துத் துறைகளிலும் பாண்டித்தியம் பெறுவது என்பது அல்ல. அதில் தனக்குத் தேவைப்படும் துறைசார் மொழியைக் கற்பது என்பதே பொருள் இதைத் தான் ஆறுமாதத்தில் கற்கலாம் என்கின்றனர் மொழியியல் அறிஞர்கள்.

**3. எட்டாவது இணைப்புப்பட்டியல்.**

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 344 1. மற்றும் 351ம் பிரிவுக்கான எட்டாவது இணைப்புப்பட்டியலில் கண்டுள்ள மொழிகள். 1. அசாம் 2. வங்களாம் 3. குசராத்தி 4. இந்தி 5. கன்னடம் 6. காஷ்மீர் 7. மலையாளம் 8. மராத்தி 9. ஒரிசா 10. பஞ்சாபி 11. சமஸ்கிருதம் 12. சிந்தி 13. தமிழ் 14. தெலுங்கு 15. உருது.

இம்மொழிகள் ஆங்கில அகர வரிசைக் கிரம அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ளன. இதில் உள்ள எல்லா மொழிகளுக்கும் இந்திய ஆட்சிப்பரப்பில் தேசிய இனங்கள் உண்டு. எனில் 11வது இடத்தில் உள்ள சமஸ்கிருததுக்கு மட்டும் எந்த தேசிய இனமும் கிடையாது. தவிர, அது எந்த மக்களாலும் பேசப்படும் மொழியும் அல்ல. பேச்சு வழக்கொழிந்த ஒரு மொழி அது. இருந்தும் அதை தில்லி அரசு பட்டியலில் இணைத்துள்ளது. காரணம் அது இந்துத்துவ இறைவழிபாட்டின் வேத மொழியாக ''தேவ பாஷையாக'' மேலிடத்தில் வைக்கப்பட்டு மற்றவர்களை அதற்கு அடிமைப்படுத்துகிறது. இதிலிருந்தும் தில்லி அரசின் சமஸ்கிருத - இந்துத்துவ ஆதிக்கத்தைப் புரிந்து கொள்ளலாம்.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY
படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இந்நூல்.....

எம்மொழிக்கும் உள்ள சனநாயக உரிமையின் அடிப்படையில் மொழிக்கொள்கை குறித்த கோட்பாடுகளையும் அதற்கான வரலாற்றுப் பின்னணிகளையும் இந்நூல் சுருக்கமாக ஆராய்கிறது.

இதன்வழி, மும்மொழிக்கொள்கை மோசடிக் கொள்கை இரு மொழிக்கொள்கை ஏமாற்றுக் கொள்கை என இவ்விரண்டையும் அம்பலப்படுத்தி, ஒரு மொழிக் கொள்கையே உண்மைக் கொள்கை, அதுவே நமது உரிமைக்கொள்கை என்பதை இது நிலை நாட்டுகிறது.

அதோடு மொழி என்பது தேசிய இனத்தின் அடையாளம் என்கிற வகையில் மும்மொழிக்கும் - இந்திய தேசியத்திற்கும்; இரு மொழிக்கும் - திராவிட தேசியத்திற்கும்; ஒரு மொழிக்கும் - தமிழ் தேசியத்திற்குமான உறவை இது தெளிவு படுத்துகிறது.

தமிழ்ப் பற்றாளர்கள், தமிழ் இன உணர்வாளர்கள் அனைவரும் தங்களைக் கோட்பாட்டு ரீதியான புரிதலுக்கு உட்படுத்திக்கொள்ள அவசியம் வாங்கிப்படித்து பயனடைய வேண்டியதொரு முக்கியமான நூல் இது.

படிப்பகம்